**DINDIGUL CITY MUNICIPAL CORPORATION**

# REPORT ON DISBURSMENT LINKED INDICATORS

# DLI -5

# PI -2.3 ANNUAL REPORT OF EXECUTIVE AUTHORITY

## திண்டுக்கல் மாநகராட்சி

## 2025-2026 ம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை

### 1. அமைப்பும் நிர்வாகமும்

திண்டுக்கல் மாநகராட்சி 01.11.1866ம் நாள் தோற்றுவிக்கப்பட்டு, 23.1.1988ம் தேதிய நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 149 எண்ணிட்ட அரசாணையின்படி 1.4.1988ந் தேதி முதல் சிறப்பு நிலை நகராட்சியாக உயர்த்தப்பட்டு இயங்கி வந்தது. அரசாணை எண்.25, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை (தேர்தல்) நாள் 17.2.2014.ன் படி கடந்த 19.02.2014 முதல் மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு இயங்கி வருகிறது.

### 2. நிர்வாக எல்லை

திண்டுக்கல் மாநகராட்சியின் தற்போதைய மொத்த பரப்பு 14.01 சதுர கிலோ மீட்டராகும். 2011ம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி இம்மாநகராட்சியின் மக்கள் தொகை 2,07,225 ஆகும். தற்போதைய மக்கள் தொகை 2,30,940 மாநகராட்சியின் சராசரி ஆண்டு வருமானம் வரி, வரியில்லா இனங்கள் மற்றும் மத்திய/மாநில அரசு மானியங்கள் உட்பட ரூ.136.62 கோடி ஆகும்.

**3. பணியாளர்கள்**

1.4.2025 முதல் 31.3.2026 வரை கீழேக் கண்டவர்கள் ஆணையராகவும், துறைத் தலைவர்களாகவும் பணிபுரிந்துள்ளனர்.

| வ. எண் | பதவி | பணிபுரிந்த அலுவலர்களின் பெயர்கள் (திருவாளர்கள்) | பணிபுரிந்த காலம் |
|---|---|---|---|
| 1 | ஆணையர்(மு.கூ.பொ) | க. சிவக்குமார் | 01.04.2025 –21.04.2025 |
| | ஆணையர் | ம. செந்தில்முருகன் | 22.04.2025 –31.03.2026. |
| | உதவி ஆணையர்(வ ம ப) / கணக்கு (பொ) | என். ஆறுமுகம் | 01.04.2025 –03.10.2025 |
| | உதவி ஆணையர்(வ ம ப) / கணக்கு (பொ) (கூ.பொ) | ஜி. வள்ளிராஜம் | 04.10.2025 –31.10.2025 |
| 2 | உதவி ஆணையர்(வ ம ப) / கணக்கு (பொ) (கூ.பொ) | எஸ். சாராங்க சரவணன் | 01.11.2025 –31.03.2026 |
| | நிர்வாக அலுவலர்(கூ.பொ) | எஸ். விஜயராகவன் | 01.04.2025 –31.03.2026 |
| | கணக்கு அலுவலர் (கூ.பொ) | ப. முத்துக்குமரன் | 01.04.2025 –31.03.2026 |
| | கண்காணிப்பாளர் | ந. சாந்தி(தப.நீ) | 06.07.2024 முதல் தற்காலிக பணிநீக்கம் |
| | | மு. சங்கர் | 01.04.2025 –31.03.2026 |
| | | ரெ. அலமேலு மங்கையற்கரசி | 17.04.2025- 31.03.2026 |
| | செயற்பொறியாளர் (ப) | கரு.சீ. கருப்பையா | 01.04.2025 –30.06.2025 |
| | செயற்பொறியாளர் (பணிகள்) (கூ.பொ) | ஜி. வள்ளிராஜம் | 01.07.2025 – 31.03.2026 |
| | உதவி செயற்பொறியாளர் (பணிகள்) | ஜி. வள்ளிராஜம் | 01.04.2025 –31.03.2026 |
| 8 | மாநகர் நல அலுவலர் | மரு. எஸ்.ராம்குமார் | 01.04.2025 – 13.03.2026 |

| | | | |
|---|---|---|---|
| | | மரு.பி. முருகானந்த் | 14.03.2026– 31.03.2026 |
| | துப்புரவு அலுவலர் | சி.அறிவுச்செல்வம் | 01.04.2025 –31.03.2026 |
| | | சி. தங்கவேல் | 01.04.2025 –31.03.2026 |
| | | அ.ஜான் பீட்டர் | 01.04.2025 –31.03.2026 |
| | | ச.விஜய ஆனந்த் | 01.04.2025 –31.03.2026 |
| | | | |
| | முதுநிலை நகரமைப்பு அலுவலர் ( திட்டம் ) (கூ.பொ) | ஜி. வள்ளிராஜம் | 01.04.2025 –31.03.2026 |
| | உதவி நகரமைப்பு அலுவலர் ( திட்டம் ) | ஜி. வள்ளிராஜம் | 01.04.2025 –31.03.2026 |
| | கணக்கர் | கா. முருகானந்தம் | 01.04.2025 –31.03.2026 |
| | உதவி வருவாய் அலுவலர் | எஸ். விஜயராகவன் | 01.04.2025 –31.03.2026 |
| | | ப. முத்துக்குமரன் | 01.04.2025 –31.03.2026 |
| | | க. மணிகண்டன் | 01.04.2025 –31.03.2026 |
| | உதவி வருவாய் அலுவலர் (கூ.பொ) | மு. சங்கர் | 01.04.2025 –31.03.2026 |
| | சிறப்பு வருவாய் ஆய்வர் | அ. ஆரோக்கியசாமி | 01.04.2025 –31.03.2026 |

**4. கூட்டங்கள்**

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 28 வது பிரிவின் கீழ் ஏற்படுத்தப்பட்ட விதிகளின்படி பின்வரும் விபரப்படி இயல்பு, அவசரம் மற்றும் சிறப்பு கூட்டங்கள் மொத்தம் 14 கூட்டங்கள் நடைபெற்றன.

பொதுவாக ஒவ்வொரு மாநகர மன்றக்கூட்டத்திலும் வைக்கப்பட்ட பொருள்கள் அந்தந்த மன்றக் கூட்டத்திலேயே முடிவு செய்யப்பட்டுள்ளது. அறிக்கையாண்டில் மொத்தம் 366 பொருட்கள் முடிவு செய்யப்பட்டுள்ளனர்.

| வ.எண் | வருடம் | இயல்பு | அவசரம் | சிறப்பு | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2025-26 | 6 | 7 | 1 | 14 |
| | மொத்தம் | 6 | 7 | 1 | 14 |

148 வருடங்களை கடந்து 150வது ஆண்டினை நெருங்கிக் கொண்டிருந்த இச்சிறப்புநிலை நகராட்சியினை அருகில் உள்ள கிராமங்களுடன் சேர்த்து மாநகராட்சியாக தரம் உயர்த்தி அரசாணை எண். 25, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை (தேர்தல்) நாள் 17.2. 2014.ன் படி கடந்த 19.02.2014 முதல் மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு இயங்கி வருகிறது.

**5. மேலாளுகை**

அறிக்கையாண்டில் மாநகராட்சி அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு பின்வரும் ஆண்டுகளில் ஊதியம் மற்றும் இதர படிகள் வழங்கிய வகையில் செலவு ரூ3027.04 இலட்சம் ஆகியுள்ளது. ஊழியர்களை தண்டிக்கும் விதிளை கடைப்பிடிப்பதில் குறையேதும் ஏற்படவில்லை.

| வ.எண் | வருடம் | ஊதியம் மற்றும் இதர படிகள் | ஓய்வூதியம் | இதர பணப்பயன்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2025-26 | 1617.97 | 1194.01 | 215.04 | 3027.04 |
| | மொத்தம் | 1617.97 | 1194.01 | 215.04 | 3027.04 |

அறிக்கையாண்டில் அச்சுக் கூலியாகவும் எழுது பொருட்கள் வாங்கவும் செலவிடப்பட்ட தொகை பின்வருமாறு.

| வ.எண் | வருடம் | செலவின தொகை (ரூ.) இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | 2024-25 | 15.95 |
| | மொத்தம் | 15.95 |

**6. வழக்குகள்**

அறிக்கையாண்டு முழுவதும் திரு. எஸ். சந்திரசேகரன், இம்மாநகர் மாமன்ற வழக்கறிஞராக பணியாற்றியுள்ளார்.

| வ.எண் | வருடம் | ஏப்ரல் முதல் தேதியில் உள்ள வழக்குகள் | அறிக்கையாண்டில் பெறப்பட்ட வழக்குகள் | முடிவு செய்யப்பட்ட வழக்குகள் | நிலுவை வழக்குகள் |
|---|---|---|---|---|---|
| 1 | 2025–26 | 23 | – | – | 23 |
| | மொத்தம் | 23 | – | – | 23 |

## ஐஐ.பொறியியல் பிரிவு

**7. பொறியியல் இலாகா பணிகள்**

சாலைகள் அமைத்தல், கட்டிடங்கள் கட்டுதல், குடிநீர் வழங்குதல், பாதாள சாக்கடை அமைப்பு வடிகால்வேலைகள், தெரு விளக்குகள், பூங்காக்கள், தோட்டங்கள் சம்பந்தப்பட்ட பராமரிப்பு வேலைகள் முக்கியமானதாகும்.

**8. இலாகா பணியாட்கள்**

இம்மாநகராட்சி பொறியியல் பிரிவில் பணிபுரியும் பணியாளர்கள் மூன்று வகைப்படுவர்.

1. பொது மராமத்து பணியாளர்கள்
2. குடிநீர் விநியோகப் பணியாளர்கள்.
3. பாதாள சாக்கடைத் திட்டம்

பொது மராமத்து பிரிவு பணியாளர்கள் எண்ணிக்கை விபரம் பின்வருமாறு

| | 2025-26 |
|---|---|
| செயற்பொறியாளர் | 1 |
| உதவிப் பொறியாளர் | 2 |
| பட வரைவாளர்கள் | 1 |
| பணி ஆய்வாளர்கள் | 8 |
| மின் பணியாளர்கள் | 2 |
| மின் பணி உதவியாளர்கள் | 5 |

**<u>குடிநீர் விநியோகப் பணியாளர்கள் எண்ணிக்கை.</u>**

| | | 2024-25 |
|---|---|---|
| 1 | உதவிப் பொறியாளர் | 6 |
| 2 | குடிநீர் விநியோகம் தலைமை நிலைய கண்காணிப்பாளர் (பொ) | 1 |
| 3 | குழாய் ஆய்வாளர்கள் | 0 |

| | | |
|---|---|---|
| 4 | குடிநீர் குழாய் பொருத்துநர்கள் | 4 |
| | (முதல் நிலை) | 4 |
| 5 | குடிநீர் குழாய் பொருத்துநர்கள் (இரண்டாம் நிலை) | 1 |
| 6 | மின் பணியாளர் (முதல் நிலை ) | 2 |
| 7 | மின் பணியாளர்கள் (இரண்டாம் நிலை ) | 6 |
| 8 | வடி தொட்டி இயக்குபவர்கள் | 2 |
| 9 | நீரேற்று நிலையத் துப்புரவாளர்கள் | 2 |
| 10 | காவலர்கள் | 0 |
| 11 | தண்ணீர் லாரி ஓட்டுநர்கள் | 2 |

**பாதாள சாக்கடைத் திட்டம்**

திண்டுக்கல் மாநகராட்சியில் முதற்கட்டமாக, மொத்தமுள்ள 48 வார்டுகளில் 13 முழுமையாகவும், 13 வார்டுகளில் பகுதியாகவும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டு 2013 முதல் பயன்பாட்டில் உள்ளது. மாநகரில் 13.65 எம்.எல்.டி திறன் கொண்ட கழிவுநீர் சுத்தகரிப்பு நிலையம் (STP) பொன்மான்துறை புதுப்பட்டி பள்ளப்பட்டி கிராமம் பகுதியில் உள்ளது. பாதாள சாக்கடைத் திட்டம் தற்பொழுது பயன்பாட்டில் உள்ள 26 வார்டுகளில் தினசரி உருவாகும் 4.00 எம்.எல்.டி கழிவுநீர் சுத்திகரிக்கப்பட்டு, சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் தமிழ்நாடு தோல் பதனிடுவோர் சங்க பயன்பாடு (TALCO) , சமுக நலகாடுகள் மற்றும் மீதம் உள்ள நீர் குடகனாற்றில் விடப்படுகிறது. மேற்படி 26 வார்டுகளில் உள்ள 19,420 வீடுகளில் இதுவரை மொத்தம் 13593 பாதாள சாக்கடை திட்ட இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

**புதிய பாதாள சாக்கடை திட்டம்**

மீதமுள்ள 22 வார்டுகள் மற்றும் விடுபட்ட பகுதியில் 100 % பாதாள சாக்கடை திட்டம் அமைக்கும் பணி மற்றும் 14.60 எம்.எல்.டி கொள்ளளவு உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு மையம் அமைக்கும் பணிக்கு TNCRUDP திட்டத்தின் கீழ் ரூ. 171.23 கோடிக்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. விடுபட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை திட்ட நிரேற்று நிலையம், நீர் உந்து நிலையம், கழிவு நீர் குழாய்கள் பதித்தல், வீடுகளுக்கு பாதாள சாக்கடை இணைப்பு வழங்குதல் மற்றும் 5 வருடம் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளுக்கு ரூ.130.636 கோடிக்கு M/s. Kevadiya Construction Pvt Ltd Ahmedabad, நிறுவனத்திற்கு 17.12.2024 ல் வேலை உத்தரவு வழங்கப்பட்டு

23 சதவீதப்பணிகள் முடிக்கப்பட்டு உள்ளது. இப்பணிக்கான ஒப்பந்த காலம் 31.03.2027- ஆகும்

**மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்டுள்ள இனங்கள்**

- Wards covered – 22 Nos
- HSC – 17095 Nos
- Pumping main – 13.23 Km
- Distribution main – 134 Km
- Machine holes – 4269 Nos
- Lift stations – 7 Nos
- Pumping stations – 2 Nos

**கழிவுநீர் சுத்திகரிப்பு மையம்**

➢ ரூ.54.5850 கோடி மதிப்பீட்டில் 14.60 எம்எல்டி திறனுள்ள கழிவுநீர் சுத்தகரிப்பு மையம் (SBR- Sequential Batch Reactors) Design Built Operate and Transfer (DBOT) முறைப்படி அமைப்பதற்கு M/s. SVD Infracon limited, Chennai, நிறுவனத்திற்கு 17.12.2024-ம் தேதி வேலை உத்தரவு வழங்கப்பட்டு 23 சதவீதம் பணிகள் முடிக்கப்பட்டு உள்ளது. இப்பணிக்கான ஒப்பந்த காலம் டிசம்பர் 2026- ஆகும்.

**9. சாலைகள்**

மாநகராட்சி எல்லைக்குள் இருக்கும் சாலைகள் நெடுஞ்சாலை துறையினராலும், மாநகராட்சியினாலும் பராமரிக்கப்படுபவை என இருவகைகளாக பாகுபடுத்தப்பட்டுளளன.

மாநகராட்சி எல்லைக்குள் நெடுஞ்சாலைத்துறையினரால் பராமரிக்கப்பட்டு வரும் சாலைகளின் மொத்த நீளம். 27.00 கீ.மீ.

**சாலைப் பணிகள்**

➢ திண்டுக்கல் மாநகராட்சியில் பராமரிக்கப்படும் சாலைகளில் மொத்த நீளம் 266.915 கி.மீ ஆகும். அதன் விபரம் பின்வருமாறு

**Roads:**

- **BT Road - 157.506 km**
- **C.C. Road - 32.702 km**
- **Foot Path - 0.505 km**
- **Paver Block - 54.720 km**
- **Earthen Road - 21.482 km**

-----------------

- **Total - 266.915 km**

## Road Details - 2025-26 - Phase -I

| Sl.No | Name of the Scheme | Work Order Date | Total Esitmate Amount in Cr | Total Nos | Length in Km | Completed | | | Progress | | Expenditure (Cr) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Nos | % Completed | Length | Nos | Length | |
| 1 | Special Fund | 10.06.2025<br>07.07.2025<br>10.06.2025 | 2.63 | 42 | 7.345 | 42 | 100 | 7.345 | 0 | 0 | 2.16 |
| 2 | TURIP | 09.06.2025 | 1.16 | 23 | 2.825 | 23 | | 2.825 | 0 | 0 | 0.96 |
| 3 | 15th CFC | 22.08.2025 | 2.44 | 25 | 4.342 | 25 | | 4.342 | 0 | 0 | 2.39 |
| Total | | | 6.23 | 90 | 14.512 | 90 | | 14.512 | 0 | 0 | 5.260 |

**Road Details 2025-26 - Phase- II**

| Sl.No | Name of the Scheme | Work Order Date | Total Esitmate Amount in Cr | Total Nos | Length in Km | Completed | | | Progress | | Expenditure (Cr) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Nos | % Completed | Length | Nos | Length | |
| 1 | TURIP | 02.02.2026 | 5.2 | 68 | 10.68 | 37 | 55 | 5.92 | 31 | 4.76 | 0.28 |
| 2 | TNCRUDP | 06.03.2026 | 1.65 | 18 | 3.313 | 3 | 16 | 0.41 | 15 | 2.9 | 0 |
| Total | | | 6.85 | 86 | 13.993 | 40 | | 6.33 | 46 | 7.66 | 0.28 |

- அதன்படி, 2025-26-ஆம் ஆண்டில் முதற்கட்டமாக 15வது நிதிக்குழு திட்டம், சிறப்பு நிதி மற்றும் தமிழ்நாடு நகர்புற சாலை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ரூ. 6.23 கோடி மதிப்பீட்டில் 14.512 கி.மீ நீளத்திற்கு 90 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டுள்ளது.
- மேலும், 2025-26-ஆம் ஆண்டில் இரண்டாம் கட்டமாக தமிழ்நாடு நகர்புற சாலை அபிவிருத்தி திட்டம் மற்றும் TNCRUDP – திட்டங்களின் கீழ் ரூ.6.85 கோடி

மதிப்பீட்டில் 13.993 கி.மீ நீளத்திற்கு 86 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு அவற்றில் 6.33 கி.மீ நீளமுள்ள 40 பணிகள் முடிக்கப்பட்டு மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகிறது.

## 10. பொறியியல் கருவிகள்

அறிக்கையாண்டில் பொறியியல் பிரிவில், கீழ் குறிப்பிட்ட படி வாகனங்கள் பராமரிக்கப்பட்டன.

### குடிநீர் வாகனங்கள்

| | 2025-26 |
|---|---|
| 1. டி.என்.57- எம் -2869 | நல்ல நிலையில் உள்ளது |
| 2. டி. என்.57- எம்-2793 | நல்ல நிலையில் உள்ளது |
| 3.டி.என்.57-ஏபி -4312 | நல்ல நிலையில் உள்ளது |

## 11. தெரு விளக்குகள் பராமரிப்பு

### தெரு விளக்கு பராமரிப்பு பணி

- திண்டுக்கல் மாநகராட்சியில் 48 வார்டுகளிலுள்ள மொத்த தெருவிளக்குகளின் எண்ணிக்கை 9,911 ஆகும்.
- இவற்றில் 15 - வது நிதிக்குழு திட்டத்தின் கீழ் ரூ. 655.11 இலட்சம் மதிப்பீட்டில் 7637 எண்ணம் விளக்குகள், மின்சேமிப்பு விளக்குகளாக மாற்றப்பட்டுள்ளது.
- மீதமுள்ள 2274 எண்ணம் விளக்குகள் பழைய குழல் விளக்குகள், சோடியம் ஆவி விளக்குகள் மற்றும் மெர்க்குரி ஆவி விளக்குகள் உள்ளது.
- மாநகராட்சியில் எரியும் விளக்குகளின் சதவீதம் 98.65 ஆகும்.

இம்மாநகராட்சி மூலம் பராமரிக்கப்பட்டு வரும் மின் விளக்குகளின் விபரங்கள் பின்வருமாறு.

| வ. எண் | தெருவிளக்குகளின் வகை | 2025-26 |
|---|---|---|
| 1 | 20 வாட்ஸ் எல்.இ.டி. விளக்குகள் | 6264 |
| 2 | 40 வாட்ஸ் எல்.இ.டி. விளக்குகள் | 547 |
| 3 | 70 வாட்ஸ் எல்.இ.டி. விளக்குகள் | 297 |
| 4 | 90 வாட்ஸ் எல்.இ.டி. விளக்குகள் | 236 |
| 5 | 120 வாட்ஸ் எல்.இ.டி. விளக்குகள் | 71 |
| 6 | 150 வாட்ஸ் எல்.இ.டி. விளக்குகள் | 32 |
| 7 | 200 வாட்ஸ் எல்.இ.டி. விளக்குகள் | 190 |
| | **மொத்தம்** | 7637 |

தெரு விளக்கு பராமரிப்பு பிரிவில் மின் கம்பி பணியாளர்கள் மின் கம்பி உதவியாளர்கள் பணியாற்றி வருகிறார்கள். பின்வரும் ஆண்டுகளில் இப்பணியாளர்கள் ஊதியம் வழங்கிய வகையில் செலவிடப்பட்டுள்ளது

| வ. எண் | பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட செலவினம் | 2025-26 (லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | மின் கம்பி உதவியாளர்கள் | 20.64 |
| 2 | மின் கம்பி பணியாளர்கள் | 43.68 |

தெரு விளக்குகள் பராமரிப்பு செலவு மின் கட்டணம் மற்றும் புதிய மின் விளக்குகள், உதிரிச்சாமான்கள் மற்றும் பொறுப்புத் தொகை செலுத்தப்பட்ட வகையில் பின்வரும் விபரப்படி செலவினம் ஏற்பட்டுள்ளது. செலவு ரூ.34.00 இலட்சம் ஆகும்.

| வ. எண் | செலவின் விபரம் | 2025-26 (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | பராமரிப்பு செலவினம் | 20.88 |
| 2 | மின் கட்டணம் செலுத்தியது | – |
| 3 | புதிய விளக்குகள் அமைக்கப்பட்ட செலவினம் | - |
| 4 | மொத்தம் | **20.88** |

நிர்ணயிக்கப்பட்டபடி தேவைப்பட்ட இடங்களுக்கு டியூப் லைட் மற்றும் ஸடாட்டர் 6 மாதத்திறகு ஒரு முறை மாற்றப்பட்டு வருகின்றது. குழல் விளக்கு சோக் ஒரு வருடத்திறகு ஒரு சோக் மாற்றப்படுகின்றது. சோடியம் ஆவி விளக்கு 1 1/2வருடத்திறகு ஒரு சோடியம் விளக்கு மாற்றப்படுகின்றது. சோடியம் விளக்கு சோக் 2 வருடத்திறகு ஒரு சோக் மாற்றப்படுகின்றது.

**12 சிறு பாலங்கள், வடி கால்கள் பராமரிப்பு 2025-26**

திண்டுக்கல் மாநகரில் 246.23 கீ.மீ நீளத்திற்கு கழிவு நீர் வடிகால்கள் மற்றும் மழை நீர் வடிகால்கள் உள்ளது. மழை நீரை கடத்தி செல்ல தெரு சந்திப்புகளில் சிறு பாலங்கள் கட்டப்பட்டுள்ளது. இவைகள் மாநகராட்சியில் பராமரிக்கப்பட்டு வருகின்றன

## <u>மழை நீர் வடிகால் கட்டும் பணி</u>

- திண்டுக்கல் மாநகராட்சியால் பராமரிக்கப்படும் மழைநீர் வடிகாலின் மொத்த நீளம் 263.108 கி.மீ ஆகும்.
- நூலக வரி நிதி 2025-26-ன் கீழ் 6.59 கி.மீ நீளமுள்ள 147 எண்ணம் வடிகால்கள் (7 சிப்பங்கள்) ரூ. 5.65 கோடி எடுத்துக்கொள்ளப்பட்டது. இப்பணிக்கு 06.03.2026-அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

- 15வது நிதிக்குழு திட்டம் 2025-26-ன் கீழ் 5.036 கி.மீ நீளமுள்ள 113 எண்ணம் (7 சிப்பங்கள்) வடிகால்கள் ரூ. 5.74 கோடி எடுத்துக்கொள்ளப்பட்டது. இப்பணிக்கு 11.03.2026-அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

**13. பயணியர் விடுதி 2025-26**

திண்டுக்கல் மாநகராட்சியில் பயணியர் விடுதி புதுப்பிக்கப்பட்டு நன்கு பராமரிக்கப்பட்டு வருகின்றது. மேற்படி விடுதியில் கீழே இரண்டு அறைகளும், முதல் தளத்தில் இரண்டு அறைகளும் உள்ளது. இவற்றை தவிர 7 அறைகள் கொண்ட சத்திரம் ஒன்று இருந்ததை மாநகராட்சி அலுவலர்களின் குடியிருப்பாக மாற்றப்பட்டு 01.06.77 முதல் நகராட்சி ஊழியர்களுக்கு வீட்டு வாடகைக்கு விடப்பட்டுள்ளன. பயணியர் விடுதி இந்நகருக்குள் வரும் நடுத்தர மக்களுக்கும் , அரசு அலுவலர்களுக்கும் மிக்க பயன் உள்ளதாக இருந்தது. முக்கிய பிரமுகர்கள், பல துறை அலுவலர்கள் மற்றும் ஆய்வு அலுவலர்கள் தங்க உதவியாக இருந்து வந்தது.

**14. பள்ளிக் கட்டிடங்கள் அபிவிருத்தி திட்டம் 2025-26**

- திண்டுக்கல் மாநகராட்சியில் மேல்நிலைப்பள்ளி 1 எண்ணம், உயர்நிலைப்பள்ளி 1 எண்ணம், நடுநிலைப்பள்ளி 1 எண்ணம், துவக்க பள்ளிகள் 14 எண்ணம் ஆக மொத்தம் 17 எண்ணம் பள்ளிகள் மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது.
- மாநில நிதி குழு திட்டம் - பள்ளிகள் மேம்பாட்டு நிதி - உட்கட்டமைப்பு அபிவிருத்தி பணிகளின் கீழ் 12 பள்ளிகளில் ரூபாய் 390.10 லட்சம் மதிப்பீட்டில் கூடுதல் வகுப்பறைகள் கட்டும் பணியில் 11பணிகள் முடிக்கப்பட்டு 1 பணி நடைபெற்று வருகிறது.
- மாநில நிதி குழு திட்டம் - பள்ளிகள் மேம்பாட்டு நிதி - இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிகளின் கீழ் 9 பள்ளிகளில் ரூபாய் 161.70 லட்சம் மதிப்பீட்டில் வகுப்பறைகள் பராமரிக்கும் பணியில் அணைத்து பணிகளும் முடிவுற்றது.

| வ.எண். | பள்ளியின் பெயர் |
|---|---|
| 1 | மேற்கு ரத வீதி மாநகராட்சி ஆரம்பப் பள்ளி |
| 2 | கென்னடி நினைவு மாநகராட்சி ஆரம்பப் பள்ளி |
| 3 | பூச்சிநாயக்கன்பட்டி மாநகராட்சி ஆரம்பப் பள்ளி |
| 4 | நாகல்புதுார் மாநகராட்சி ஆரம்பப் பள்ளி |
| 5 | தொந்தியா பிள்ளை சந்து மாநகராட்சி ஆரம்பப் பள்ளி |
| 6 | அண்ணா நினைவு மாநகராட்சி ஆரம்பப் பள்ளி |
| 7 | கவாடக்காரத் தெரு மாநகராட்சி ஆரம்பப் பள்ளி |
| 8 | காந்திஜி நினைவு மாநகராட்சி ஆரம்பப் பள்ளி |
| 9 | பாறைப்பட்டி மாநகராட்சி ஆரம்பப் பள்ளி |

| | |
|---|---|
| 10 | முகமதியாபுரம் மாநகராட்சி ஆரம்பப் பள்ளி |
| 11 | பாலதிருப்பதி மாநகராட்சி ஆரம்பப் பள்ளி |
| 12 | சந்தை ரோடு மாநகராட்சி ஆரம்பப் பள்ளி |
| 13 | நூற்றாண்டு நினைவு மாநகராட்சி ஆரம்பப் பள்ளி |
| 14 | சௌராஷ்டிராபுரம் மாநகராட்சி ஆரம்பப் பள்ளி |
| 15 | மேட்டுப்பட்டி மாநகராட்சி ஆரம்பப் பள்ளி |
| 16 | மேட்டுப்பட்டி மாநகராட்சி உயர்நிலைப் பள்ளி |
| 17 | நேருஜி நினைவு மாநகராட்சி மேல்நிலைப் பள்ளி |

**<u>நூலகம் மற்றும் அறிவுசார் மையம் அமைக்கும் பணி</u>**

- மூலதன மான்ய நிதியின் கீழ் ரூ.250.00 இலட்சம் மதிப்பீட்டில், மாணவர்கள் மற்றும் வேலை ஆர்வலர்கள் போட்டித் தேர்வுகளுக்கு தங்களைத் தயார்படுத்திக்கொள்ள உதவும் வகையில் நவீன அறிவு சார் மையம் 729 சதுர மீட்டர் (7843 சதுர அடி) (தரைத்தளம் 489.12 $m^2$ + முதல் தளம் 239.82 $m^2$) பரப்பளவைக் கொண்ட நூலகம் மற்றும் அறிவு சார் மையம் வார்டு எண். 36-க்குட்பட்ட சந்தை சாலையில் கட்டப்பட்டு உபயோகத்தில் உள்ளது. (வகை III) கட்டுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டது.
- இந்நூலகம் மற்றும் அறிவு சார் மையமானது தரைத் தளம் மற்றும் முதல் தளத்துடன் (இடத்தின் மொத்த பரப்பளவு 12753 ச.அடி (அ) 1185.30 ச.மீ) கட்டப்பட்டுள்ளது. இம்மையத்தில் கீழ்க்கண்ட வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

**<u>தரைத் தளம்</u>**

- வரவேற்பு அறை
- மேலாளர் அறை
- கட்டுப்பாட்டு அறை
- சிறுவர்கள் பகுதி
- பொருட்கள் வைப்பறை
- கணினி பிரிவு – 11 எண்ணம்
- 72 நபர்கள் படிக்கும் வகையிலான படிப்பறை
- கழிப்பிட வசதி

**<u>முதல் தளம்</u>**

- கலந்தாய்வு கூட்ட அரங்கம்
- 24 நபர்கள் படிக்கும் வகையிலான படிப்பறை
- கணினி பிரிவு – 9 எண்ணம்
- கழிப்பிட வசதி

**இதர வசதிகள்**

- 5 எண்ணம் சூரிய ஒளி விளக்கு
- 3000 புத்தகங்கள் வைக்கும் வகையிலான நூலக அலமாரிகள்
- மேசைகள் மற்றும் இருக்கைகள்
- Wi Fi வசதி
- கண்காணிப்பு கேமரா – 17 எண்ணம்
- வாகனங்கள் நிறுத்தும் வசதி
- 63.5 KVA மின் ஊக்கி
- சோலார் மேற்கூரை அமைப்பு
- ஸ்மார்ட் கிளாஸ்

இம்மையம் மேற்காணும் அனைத்து வசதிகளுடன் கட்டி முடிக்கப்பட்டு 05.01.2024 -முதல் பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது.

**15. பூங்காக்கள், அரங்குகள் 2025-26**

மாநகராட்சி பயணியர் விடுதியிலும், மலைக் கோட்டை அருகிலும் பூங்காக்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றது. இந்நகரில் உள்ள குமரன்பூங்கா கண்ணைக் கவரும் விதத்திலும், சிறுவர் சிறுமியர்களை கவரும் வகையில் குமரன் பூங்கா வடிவிலும், அமைப்பிலும் அழகுற அமைக்கப்படவும், பூங்காவிற்குத் தேவையான விளையாட்டு சாதனங்கள் மற்றும் எல்லா மக்களையும் கவர்ந்திழுக்கும் வகையில் கண் கவர் சிலைகள் திண்டுக்கல் நகர் நன்கொடையாளர்கள் மூலம் நிறுவப்பட்டது பூங்கா நுழைவுக் கட்டணமாக பெரியவர்களுக்கு ரூ.3/ ம் சிறியவர்களுக்கு ரூ.2 /- ம் வசூல் செய்யப்பட்டு வருகின்றது. இப்பூங்கா பொது மக்களை வெகுவாக கவர்ந்துள்ளதுடன பொழுது போக்கிற்கு உதவிடும் வகையில் உள்ளது. தற்போது இப்பூங்காவில் பராமரிப்பு மற்றும் மராமத்துப் பணிகள் செய்யப்பட உள்ளன.

**சி6 சத்துணவு இருக்கை**

**16. சத்துணவுத் திட்டம் 2025-26**

திண்டுக்கல் மாநகராட்சியின் கீழ் 17 நகராட்சி ஆரம்பப் பள்ளிகளிலும், 1982ம் ஆண்டு முதல் ஏழை மாணவ மாணவியர்களுக்கு மதிய உணவு வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.1984ம் ஆண்டு முதல் இத்திட்டம் மேலும் விரிவுபடுத்தப்பட்டு நகராட்சி உயர்நிலைப்பள்ளி மற்றும் நேருஜி நினைவு நகராட்சி மேல்நிலைப்பள்ளி மாணவர்களுக்கும் மதிய உணவு திட்டத்தின் கீழ் உணவுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

திண்டுக்கல் மாநகராட்சியில், தமிழ்நாடு அரசு சத்துணவுத் திட்டத்தின் கீழ் 14 நகராட்சி ஆரம்பப்பள்ளி, ஒரு நகராட்சி நடுநிலைப் பள்ளி, மேட்டுப்பட்டி நகராட்சி உயர்நிலைப்பள்ளி மற்றும் நேருஜி நினைவு நகராட்சி மேல்நிலைப்பள்ளி ஆக மொத்தம் 17 பள்ளிகளில் இத்திட்டம் செயல்பட்டு வருகிறது. அறிக்கையாண்டில் இப்பணி சிறப்பாக நடைபெற 8 அமைப்பாளர்கள், 11 சமையலர்கள், 7 சமையலர் உதவியாளர்கள் ஆக மொத்தம் 26 பணியாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். சத்துணவு வழங்கும் திட்டத்திற்காக அறிக்கையாண்டில் ரூ.31,20,383/- செலவழிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டில் ரூ.2,60,824/- செலவழிக்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் தினசரி பயனடைந்த மாணவ மாணவியர்கள் எண்ணிக்கை 1946 ஆகும். மேலும் அரசாணை (நிலை) எண்.20, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டம் (ச.உ.தி-2) துறை நாள் 12.9.2001 ல் இத் திட்டத்தின் கீழ் வாரத்திற்கு ஐந்து முறை முட்டைகளும், ஒவ்வொரு மாணவ மாணவியருக்கும் வாரம் ஒரு முறை வெள்ளிக் கிழமையில் உருளைக்கிழங்கும், மாதத்தில் 1 மற்றும் 3வது செவ்வாய்க்கிழமையில் கொண்டைக் கடலை, மாதத்தில் 2 மற்றும் 4வது வியாழக்கிழமை பாசிப்பயறு வேகவைத்தும் வழங்கப்பட்டு வருகிறது.திண்டுக்கல் மாநகராட்சியின் கீழ் 17 நகராட்சி ஆரம்பப் பள்ளிகளிலும், 1982ம் ஆண்டு முதல் ஏழை மாணவ மாணவியர்களுக்கு மதிய உணவு வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1984ம் ஆண்டு முதல் இத்திட்டம் மேலும் விரிவுபடுத்தப்பட்டு நகராட்சி உயர்நிலைப்பள்ளி மற்றும் நேருஜி நினைவு நகராட்சி மேல்நிலைப்பள்ளி மாணவர்களுக்கும் மதிய உணவு திட்டத்தின் கீழ் உணவுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

**எச்1 மற்றும் எச்2 இருக்கை**

**ஐஐஐ.பொது சுகாதாரப் பிரிவு**

**17 மருந்தகங்கள் 2025-26**

இம்மாநகராட்சியில் அறிக்கையாண்டிலும் 4 மருந்தகங்கள் பராமரிக்கப்பட்டு வருகிறது. அனுமதிக்கப்பட்ட சித்த வைத்திய முறை மருந்தகங்கள் மூன்றும், ஆயுர்வேத முறையில் ஒன்றும் ஆக மொத்தம் 4 மருந்தகங்களில் கீழே குறிப்பிட்டுள்ள இடங்களில் மட்டும் இம்மாநகராட்சியில் தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகிறது. இம்மாநகராட்சியில் அறிக்கையாண்டிலும் 4 மருந்தகங்கள் பராமரிக்கப்பட்டு வருகிறது. அனுமதிக்கப்பட்ட சித்த வைத்திய முறை மருந்தகங்கள் மூன்றும் ஆயுர்வேத முறையில் ஒன்றும் ஆக மொத்தம் 4 மருந்தகங்களில் கீழே குறிப்பிட்டுள்ள இடங்களில் மட்டும் இம்மாநகராட்சியில் தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகின்றது.

இம்மாநகராட்சியில் அறிக்யாண்டிலும் 4 மருந்தகங்கள்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றது. அனுமதிக்கப்பட்ட சித்த வைத்திய முறை மருந்தகங்கள் மூன்றும், ஆயுர்வேத முறையில் ஒன்றும் ஆக மொத்தம் 4 மருந்தகங்களில் கீழே குறிப்பிட்டுள்ள இடங்களில் மட்டும் இம்மாநகராட்சியில் தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகின்றது.

**1. ரவுண்ட் ரோடு புதூர் சித்த மருந்தகம்**

மேற்கண்ட சித்த மருந்தகங்கள்களில் சித்த வைத்திய முறையில் மருத்துவம் பார்க்கப்படுகிறது. மேற்கண்ட பழனி ரோடு சித்த மருந்தகத்தில் ஒரு மருத்துவ அலுவலர், ஒரு மருந்தாளுநர், ஒரு பெண் செவிலிய உதவியாளர் மற்றும் ரவுண்ட் ரோடு சித்த மருந்தகத்தில் ஒரு மருத்துவ அலுவலர், ஒரு மருந்தாளுநர் பணியாற்றுகின்றார்கள். அறிக்கையாண்டில் கீழ்க்கண்ட பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.

| வ. எண் | மருந்தகம் | மருத்துவ அலுவலர் | மருந்தாளுனர் | ஆண் செவிலிய உதவியாளர் | பெண் செவிலிய உதவியாளர் | சுத்தம் செய¦யும் உதவியாளர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | ரவுண்ட் ரோடு புதூர் | 1 | 2 | - | 0 | 0 |

**18.நோயாளிகள் 2025-26**

அறிக்கையாண்டில் சிகிச்சை பெற்றவர்களின் எண்ணிக்கை ஆகும்.

ஒவ்வொரு மருந்தகத்திலும் சிகிச்சை பெற்றவர்களின் விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| வ.எண் | மருந்தகத்தின் பெயர் | சிகிச்சை பெற்றோர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | ரவுண்ட் ரோடு புதூர் மருந்தகம் | 21401 |
| | மொத்தம் | 21401 |

2025-2026 அறிக்கையாண்டில் சிகிச்சை பெற்றவர்களின் எண்ணிக்கை ஆகும்.

ஒவ்வொரு மருந்தகத்திலும் சிகிச்சை பெற்றவர்களின் விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| வ.எண் | மருந்தகத்தின் பெயர் | சிகிச்சை பெற்றவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | ரவுண்ட் ரோடு புதூர் மருந்தகம் | 21401 |
| | மொத்தம் | 21401 |

**19 இட வசதியும் கருவிகளும்**

மேற்கண்ட மருந்தகங்கள் யாவும் சொந்தக் கட்டிடங்களில் இயங்கி வருகின்றன. மருந்தகங்களுக்குத் தேவையான துணைக்கருவிகள் போதுமானவையாக இருந்தன. அனைத்து மருந்தகங்களுக்கும் தேவையான மருந்துகள் அவப்பொழுது மாநகராட்சி மூலம் வாங்கி வழங்கப்பட்டன. அறிக்கையாண்டில் மருந்தகப் பணியாளர்களுக்கு ஊதியச் செலவும், கீழ்க்கண்டவாறு செலவிடப்பட்டுள்ளது.

| ஆண்டு | செலவிடப்பட்ட |
|---|---|
| 2025-26 | 1,63,67,049 |

**20. நகர ஆரம்ப சுகாதார நிலையங்கள்**

இம்மாநகராட்சியில் 4நகர ஆரம்ப சுகாதார நிலையங்கள் கீழ்க்கண்ட இடங்களில் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது.

| | |
|---|---|
| 1 | கமலா நேரு நகர ஆரம்ப சுகாதார நிலையம் |
| 2 | சவரியார்பாளையம் நகர ஆரம்ப சுகாதார நிலையம் |
| 3 | மரியநாதபுரம் நகர ஆரம்ப சுகாதார நிலையம் |
| 4 | பழனி ரோடு நகர ஆரம்ப சுகாதார நிலையம் |

இதில் கமலா நேரு நகர ஆரம்ப சுகாதார நிலையம் புதுப்பிக்கப்பட்டு 61 படுக்கைகள் அமைக்கப்பட்டுள்ளது. அறுவை சிகிச்சை கூடம் கட்டப்பட்டு அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மற்றும் அனைத்து நோய்களுக்கும் சிகிச்சை மேற்கொள்ளப்படுகிறது. சவரியார்பாளையம் நகர ஆரம்ப சுகாதார நிலையம் 16 படுக்கைகளும், மரியநாதபுரம் நகர ஆரம்ப சுகாதார நிலையம் 10 படுக்கைகளும், பழனி ரோடு நகர ஆரம்ப சுகாதார நிலையம் 10 படுக்கைகளும் சிறப்பாக பராமரிக்கப்பட்டு வருகிறது. நகர ஆரம்ப சுகாதார நிலையங்கள் பராமரிக்கப்பட பின்வரும் விபரப்படி செலவினங்கள் (பணியாளர்கள் ஊதியம் உட்பட) ஏற்பட்டுள்ளது.

அறிக்கையாண்டில் கீழ்க்கண்ட அலுவலர்கள் பணியாற்றியுள்ளனர்.

| வ. எண் | அலுவலரின் பதவி விபரம் | 2019-20 | 2020-21 | 2021-22 | 2024-25 | 2025-26 |
|---|---|---|---|---|---|---|
| 1 | பெண் மருத்துவ அலுவலர் | 1 | 1 | 1 | 1 | 1 |
| 2 | பகுதிநேர சுகாதார செவிலியர் | 1 | 1 | 1 | 12 | 5 |
| 3 | மகப்பேறு உதவியாளர்கள் | 10 | 10 | 9 | 4 | 3 |
| 4 | பெண் துப்புரவாளர்கள் | 2 | 1 | 1 | 1 | 0 |
| 5 | அலுவலக உதவியாளர் | 1 | 1 | 1 | 1 | 0 |
| 06 | காவலர் | 0 | 0 | 0 | 0 | 0 |

**21நகர ஆரம்ப சுகாதார நிலையம் பராமரிப்பு செலவு**

அறிக்கையாண்டில் மாநகராட்சி நகர ஆரம்ப சுகாதார நிலையங்கள் மூலம் ஏப்ரல் முதல் மார்ச் 2026 வரை. பிரசவங்கள் பார்க்கப்பட்டன. அறிக்கை ஆண்டில் பராமரிப்பு மானியம் ஏதும் பெறவில்லை

**22.பிறப்பு மற்றும் இறப்பு விகிதம்**

| வ.எண் | மொத்தம் பதிவான பிறப்புகள் | 2025-26 |
|---|---|---|
| 1 | ஆண்கள் | 1582 |
| 2 | பெண்கள் | 1397 |
| | மொத்தம் | 2979 |

| வ.எண் | மொத்தம் பதிவான இறப்புகள் | 2025-26 |
|---|---|---|
| 1 | ஆண்கள் | 796 |
| 2 | பெண்கள் | 685 |
| | மொத்தம் | 1481 |

கீழகாண் பல வகை நோய் காரணங்களால் இறப்புகள் எதுவும் இல்லை.

| வ.எண் | நோயின் வகை | 2025-26 |
|---|---|---|
| 1 | காசநோய் | |
| 2 | நீரிழிவு (சர்க்கரை நோய்) | |
| 3 | நிமோனியா விஷக் காய்ச்சல் | |
| 4 | மஞ்சள் காமாலை | |
| 5 | எய்ட்ஸ் நோய் | |
| 6 | புற்று நோய் | |
| 7 | இரத்த சோகை | |
| 8 | மூளைக் காய்ச்சல் | |
| 9 | இருதய நோய் மற்றும் மாரடைப்பு | |
| 10 | மூளையில் கட்டி | |
| 11 | இரத்தக் கொதிப்பு | |
| 12 | பாம்புக் கடி | |
| 13 | விஷ விதை சாப்பிட்டு | |
| 14 | பூச்சிக் கொல்லி மருந்து | |
| 15 | குறைப்பிரசவம் | |
| 16 | சிசு மரணம் | 11 |
| 17 | மகப்பேறு மரணம் | |
| 18 | புரை ஓடிய தோற்று | |
| 19 | ஆஸ்துமா | |
| 20 | நுரையீரல் நோய் | |
| 21 | சாலை விபத்து | |
| 22 | மூச்சு திணறல் | |
| 23 | சிறுநீரகம் கோளாறு | |
| 24 | வயோதிகம் | |
| 25 | வயிற்றுப் புண் | |
| 26 | தலைக் காயம் | |
| 27 | பெரியம்மை, காலரா | |
| 28 | தீக்காயம் | |

| | | |
|---|---|---|
| 29 | வாதநோய் | |
| 30 | இதர காரணங்களால் | |
| | | |

**23. பெரியம்மை**

2009-10 ம் ஆண்டிலிருந்து இம்மாநகராட்சியில் பெரியம்மை நோய் முற்றிலும் ஒழிக்கப்பட்டு நாளது தேதி வரை பெரியம்மை ஏதும் இல்லை.

**24. ஐந்தாவது இந்திய மக்கள் தொகை திட்டத்தின் கீழ் 4 நகர ஆரம்ப சுகாதார நிலையங்கள்**

2001-2002.ல் அரசாணை எண்.136. நாள் 31.3.2001 ஆணைப்படி பொது சுகாதாரம் மற்றும் நல மையத்தை நகர்புற நல மையங்களாக மாற்றி செயல்பட்டு வந்த நிலையில், 2022-23ம் ஆண்டில் மேற்படி மையங்கள் 4 நகர ஆரம்ப சுகாதார நிலையங்களாக மாற்றியமைக்கப்பட்டு, சிறப்பான முறையில் செயல்பட்டு வருகிறது. மேலும், கமலா நேரு நகர ஆரம்ப சுகாதார நிலையம்61 படுக்கைகளுடன், அறுவை சிகிச்சை கூடம் கட்டப்பட்டு அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மற்றும் அனைத்து நோய்களுக்கும் சிகிச்சை மேற்கொள்ளப்படுகிறது..

**நகர ஆரம்ப சுகாதார நிலையங்கள் இயங்கி வரும் இடங்கள்**

1. கமலா நேரு நகர ஆரம்ப சுகாதார நிலையம்
2. சவரியார்பாளையம் நகர ஆரம்ப சுகாதார நிலையம்
3. பழனி ரோடு நகர ஆரம்ப சுகாதார நிலையம்
4. மரியநாதபுரம் நகர ஆரம்ப சுகாதார நிலையம்

நகர ஆரம்ப சுகாதார நிலைய திட்டத்தின் கீழ் பணிபுரியும் அலுவலர்கள் விபரம்

| வ.எண் | அலுவலரின் பதிவு விபரம் | 2025-26 |
|---|---|---|
| 1 | மருத்துவ அலுவலர் | 5 |
| 2 | தொகுப்பாளர் மற்றும் எழுத்தர் | 3 |
| 3 | பகுதி சுகாதார செவிலியர் | 5 |
| 4 | நகர சுகாதார செவிலியர்கள் | 8 |
| 5 | கிளாஸ் 4 பெண் பணியாளர்கள் | 0 |

2022-2023.ம் ஆண்டு திண்டுக்கல் மாநகராட்சியில் நகர்புற நல மையத்தின் செயல்பாட்டிற்கு சென்னை குடும்ப நலத் துறை இயக்குநர் அவர்கள் அறுவை சிகிச்சை மற்றும் தற்காலிக குறியீடு. நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இருந்த போதிலும்

கடந்த ஆண்டை விட குடும்ப நலப்பணியில் சிறந்த முறையில் பணி முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலையங்கள் தனக்கு ஒதுக்கப்பட்டுள்ள பணி குறிப்பிட்ட எந்த அளவிற்கு அடைந்தனர் என்பதற்கு கீழே புள்ளி விபரங்கள் தரப்பட்டுள்ளது. மேலும் மேற்கண்ட பணியாளர்கள் இப்பணியோடு, தாய் சேய் நலப்பணி, மலேரியா காய்ச்சல் நரம்பு சிலந்தி மற்றும் பல்வேறு நோய் கண்டவர் களை கண்டறிந்து நேரில் சந்தித்து மருத்துவம் பார்த்து வருகின்றனர்.

நகர ஆரம்ப சுகாதார நிலையங்கள் அடைந்த இலக்கு - 2025-26

| வ.எண் | விபரம் | குறியீடு | அடைவு |
|---|---|---|---|
| 1 | ஆண்/பெண் அறுவை சிகிச்சை | – | – |
| 2 | தாய்மார்களுக்கு கருத்தடை வளையம் பொருத்துதல் | 80 | 67 |
| 3 | தாய்மார்களுக்கு கருத்தடை மாத்திரை வழங்குதல். | 720 | 720 |
| 4 | ஆண்களுக்கு நிரோத் வழங்குதல் | 2000 | 1880 |

இந்திய மக்கள் தொகை திட்டத்தின் கீழ் பணிபுரியும் இதர செலவினங்களுக்காக 2011-12ஆம் ஆண்டில் ரூ. 1,03,14,923 மானியத்தொகை பெறப்பட்டது.

**25. நகர்ப்புற மலேரியா திட்டம்**

திண்டுக்கல் மாநகராட்சியில் நகர்ப்புற மலேரியா திட்டம் சிறப்பான முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத் திட்டத்தில் கீழ்க்கண்ட அலுவலர்களும், பணியாளர்களும் பணி புரிந்து வருகின்றனர்.

| வ.எண் | பணியிட விபரம் | பணியிடம் | பணியில் உள்ளவர்கள் |
|---|---|---|---|
| 1 | துப்புரவு ஆய்வர் | 0 | 0 |
| 2 | களப்பணி உதவியாளர் | 1 | 1 |
| 4 | கொசு ஒழிப்பு பணியாளர்கள் | 20 | 14 |

இத் திட்டம் கீழ் கண்ட இரண்டு இலக்குகளை நோக்கமாகக் கொண்டு செயல் பட்டு வருகின்றது.

1) கொசுத் தொல்லையைக் கட்டுப்படுத்துதல்
2) மலேரியா மற்றும் டெங்கு நோயை தடுத்தல், கட்டுப்படுத்துதல்¦, குணப்படுத்துதல்¦
3) விழிப்புணர்வு ஏற்படுத்துதல்

## 1) கொசுத்தொல்லையை கட்டுப்படுத்துதல் ¦

கொசுக்களின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த கொசு உற்பத்தியைத் தடுக்கும் பொருட்டு தேங்கியுள்ள சாக்கடைகளைச் சுத்தம் செய்யும் பணிகள் அந்தந்தப் பகுதித் துப்புரவுப் பணியாளர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் தேங்கியுள்ள சாக்கடைக் கழிவு நீரில் பாக்டீரிசைடு என்ற கொசுப்புழு ஒழிப்பு மருந்தானது தெளிக்கப்படுகிறது. இந்த மருந்தானது கழிவு நீரில் மட்டுமே தெளிக்கப்படும். இதனால் கழிவு நீரில் உற்பத்தியாகும் கியூலெக்ஸ் என்ற கொசுவானது உற்பத்தியாகாமல் தடுக்கப்படுகிறது. தினமும் மதியம் இதற்கென பகுதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு அந்தப் பகுதிகளில் கொசுப்புழு ஒழிப்பு மருந்து தெளிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 2) மலேரியா, டெங்கு நோயைத் தடுத்தல்

மலேரியா, டெங்கு நோய் ஏற்படாமல் தடுப்பதற்கு அந்நோயைப் பரப்பும் அனாபிலஸ் மற்றும் ஏடிஸ் என்ற கொசுவின் உற்பத்தியைத் தடுக்க வேண்டும். இந்தக் கொசுவானது நல்ல தண்ணீர் மற்றும் சிறிதளவு தேங்கும் தண்ணீர் ஆகிய இடங்களில் முட்டையிட்டு பெருகும் தன்மையுடையது. எனவே நகராட்சிப் பகுதி முழுவதும் வாரத்திற்கு ஒருமுறை அபேட் மருந்து தெளிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும் வகையில் ஆறு நாட்கள் கொண்ட வட்டாரமாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு வட்டாரப் பகுதியும் வாரத்திற்கு ஒருமுறை மருந்து தெளிப்புப் பணி மேற்கொள்ளப்படுகிறது. இந்த ஆண்டு 4 நபர்கள் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளனர். காய்ச்சல் கண்டறியப்பட்ட வீடுகள் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் கொசுப்புழு ஒழிப்பு மருந்து (அபேட்) தெளித்தல், கொசு ஒழிப்புப் புகை மருந்து அடித்து மற்ற நபர்களுக்குப் பரவாமல் தடுக்கப்பட்டது. நகரின் அனைத்துத் தண்ணீர் தொட்டிகள் (Sump), மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி (B.O.T.), குடிநீர் சேகரிப்புகள்

(Water Storage Tanks) களிலும் அபேட் எனப்படும் மருந்துக் கரைசல் தெளிக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் மலேரியா, டெங்கு நோய் தோன்றாமல் இருக்க தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது.

### 3) மலேரியா நோயைக் கட்டுப்படுத்துதல்

மலேரியா நோயைக் கட்டுப்படுத்தி விரைவிலேயே கண்டறியும் பணி மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்கென நகராட்சி செவிலியர்கள், மகப்பேறு உதவியாளர்களைக் கொண்டு இரத்தத் தடவல் சேகரிக்கும் பணி மேற்கொள்ளப்படுகிறது. நகரில் 4 நகர ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் மலேரியா மருத்துவமனை ஆகிய இடங்களிலும் இரத்தத் தடவல் சேகரிக்கப்பட்டு ஆய்வு செய்யப்படுகிறது. இந்த ஆண்டு 30254 இரத்தத் தடவல்கள் சேகரிக்கப்பட்டு நோய்க் குறியீடு உள்ள இரத்தத் தடவல்கள் எதுவும் கண்டறியப்படவில்லை.

+எந உயளந எனக் கண்டறியப்பட்ட வீடுகள், அதன் அருகில் உள்ள வீடுகளில் ரத்தத் தடவல் சேகரித்தல் மற்றும் கொசு ஒழிப்பு புகை மருந்து நெளித்து மற்ற நபர்களுக்குப் பரவாமல் தடுக்கப்பட்டது.

### 4) டெங்கு காய்ச்சல் நோயைக் கட்டுப்படுத்துதல்

தொடர்ந்து காய்ச்சல் கண்டவர்களுக்கு ரத்த மாதிரிகள் எடுக்கப்பட்டு, அவை துணை இயக்குநர், சுகாதாரப் பணிகள் அலுவலகம், திண்டுக்கல் அவர்களின் ஆய்வுக் கூடத்தில் டெங்கு காய்ச்சல் உறுதி செய்யப்பட்டவர்களின் பட்டியல் பெறப்பட்டு தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

2025-26ல் 4 நபர்கள், டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளனர். எந்த உயிரிழப்பும் இல்லை. காய்ச்சல் கண்டறியப்பட்ட வீடுகள், அதன் அருகில் உள்ள வீடுகளில் கொசுப்புழு ஒழிப்பு மருந்து (அபேட்) தெளித்தல், கொசு ஒழிப்பு புகை மருந்து அடித்து மற்ற நபர்களுக்கு பரவாமல் தடுக்கப்பட்டது.

### 5. மலேரியா நோயைக் குணப்படுத்துதல்

மலேரியா நோய் இரத்தத் தடவல் பரிசோதனை மூலம் உறுதி செய்யப்படுகிறது. இதற்கென மாநகராட்சி கமலா நேரு தாய்சேய் நல மருத்துவமனையில் தனியாக மலேரியா கிளினிக் செயல்பட்டு வருகிறது. உடனுக்குடன் இரத்தத் தடவல் பரிசோதனை செய்து மாத்திரைகள் வழங்கப்படுகிறது .

3 நாட்கள் குளோரோகுயின் மற்றும் 14 நாட்கள் பிரிமாகுயின் மாத்திரைகள் வழங்கும் பணி அந்தந்த மருத்துவ அலுவலர் கண்காணிப்பில் நகராட்சி செவிலியர்கள் மூலம் வழங்கப்பட்டன. மீண்டும் 15 வது நாள் இரத்தப் பரிசோதனை மூலம் காய்ச்சல் இல்லை என்பது உறுதி செய்யப்படுகிறது

**5) விழிப்புணர்வு ஏற்படுத்துதல்**

மாநகரில் மலேரியா நோய் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்த சுகாதார ஆய்வார்கள், பயிற்சி மாணவர்கள், தனியார் செவிலியர்கள், மற்றும் மலேரியா பிரிவு களப் பணியாளர்களைக் கொண்டு மகளிர் சுய உதவிக் குழுக்கள், காய்ச்சல் கண்டநபர்கள், குடிசைப்பகுதி மக்கள் ஆகியோருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணி சிறப்பாக மேற்கொள்ளப்பட்டது. தூய மரியன்னை மேல்நிலைப் பள்ளி, நகராட்சி மேல்நிலைப் பள்ளி ஆகிய இடங்களில் கண்காட்சி நடத்தப்பட்டு பள்ளி மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. இவ்விதம் இம்மாநகராட்சியில் நகர்ப்புற மலேரியா ஒழிப்புத் திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**26. மருந்தக மருத்துவ அலுவலர்கள்**

மருந்தக ஆய்வு உதவியாளர்கள்

சுகாதார ஆய்வர் -

**27. பொது சுகாதாரம் (துப்புரவு பணிகள்)**

நகரில் நல்ல முறையில் சுகாதாரம் பேணி காக்கப்பட்டு வருகிறது. கீழே கண்ட பணியாளர்களும், சாதனங்களும், பொது துப்புரவுப் பணிக்காக அறிக்கையாண்டில் பயன்படுத்தப்பட்டது.

| வ.எண் | பணியாளரின் பதவி விபரம் | 2025-26 |
|---|---|---|
| 1 | துப்புரவு அலுவலர்கள் | 4 |
| 2 | துப்புரவு ஆய்வார்கள் | 12 |
| 3 | களப்பணி உதவியாளர் | 1 |
| 4 | சுகாதார மேற்பார்வையாளர்கள் | 2 |
| 5 | துப்புரவு பணியாளர்கள் | 118 |
| 6 | மலேரியா மஸ்துார்கள் | 14 |
| 7 | லாரி டிரைவர்கள் | 7 |
| 8 | டிராக்டர் டிரைவர்கள் | - |
| 9 | டிராக்டர் கிளீனர்கள் | - |
| 10 | ஜீப் டிரைவர் | - |
| 11 | உதவியாளர் | 2 |
| 12 | இளநிலை உதவியாளர் | 1 |
| 13 | அலுவலக உதவியாளர்கள் | 1 |

**வாகனங்கள்**

| வ.எண் | வாகனங்களின் விபரம் | 2025-26 |
|---|---|---|
| 1 | டிப்பர் லாரி | 2 |
| 2 | ட்ரெயிலர் | - |
| 3 | லாரி | - |
| 4 | டிராக்டர் | - |
| 5 | குப்பை வண்டிகள் BOV | 92 |
| 6 | மினி ஆட்டோ | 42 |
| 7 | டம்பர் பிளேசர் வாகனம் | - |
| 8 | ஜே.சி.பி. | 2 |
| 9 | கம்பாக்டர் லாரி | 2 |

மாநகரம் 12 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பிரிவும் ஒரு துப்புரவு ஆய்வர் கண்காணிப்பில் பொது சுகாதாரம் பராமரிக்கப்பட்டு வருகிறது.

**28 துப்புரவு பணியாளர்களின் வாழ்க்கைத்தரம்**

தூய்மை பணியாளர்களுக்கு கீழ்க்கண்டவாறு இம்மாநகராட்சிப் பகுதிகளில் 151 குடியிருப்புகள் உள்ளன. அவைகளில் நிரந்தர தூய்மைப் பணியாளர்கள் குடியிருக்க அனுமதிக்கப்பட்டுள்ளனர். அப்பணியாளர்களுக்கு அரசு வழங்கும் வீட்டு வாடகைப்படி வழங்கப்படுவதில்லை. அவ்வப்போது அரசினரால் நிர்ணயிக்கப்பட்டுள்ள விகிதாச்சார அகவிலைப்படி ஒவ்வொரு தொழிலாளருக்கும் வழங்கப்பட்டு வருகிறது. ஆண்களுக்கு 2 ஜோடி காக்கி சீருடையும், பெண்களுக்கு 2 பாலியஸ்டர் புடவையும் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், தூய்மைப் பணியாளர்கள் இருபாலருக்கும் பாதுகாப்பு உபகரணங்களான ஒரு ஜோடி காலணியும், பாதுகாப்பு உபகரணங்களான முகவுறை, கையுறை, கம்பூட்ஸ், ஒளிரும் சட்டை ஆண்டொன்றுக்கு இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது.

| | | |
|---|---|---|
| 1 | நெட்டுத் தெரு | 44 |
| 2 | செல்லாண்டியம்மன் கோவில் தெரு | 20 |
| 3 | பி.வி. தாஸ் காலனி (பழைய குடியிருப்பு) | 5 |
| 4 | பி.வி. தாஸ் காலனி (புதிய அடுக்கு மாடி குடியிருப்பு) | 24 |
| | மொத்தம் | 93 |

எச்3 இருக்கை

**29. அச்சம், அருவருக்கத்தக்க தொழில்கள்**

அறிக்கையாண்டில் வர்த்தக உரிமம் தொழில்கள் உள்ளது. இத் தொழில்களை ஒழுங்கு முறைப்படுத்தி கட்டுப்படுத்த உப விதிகளும் அமுல் படுத்தப்பட்டுள்ளது. அறிக்கையாண்டில் கேட்பு வசூல் நிலுவை விபரம்.

| வருடம் | கேட்பு | வசூல் | நிலுவை |
|---|---|---|---|
| 2025-2026 | 81.06 | 81.06 | - |

**30. சந்தைகளும், திருவிழாக்களும்**

உள்ளூர் கோவில் நிர்வாகத்தினரால் வழக்கமாக கொண்டாடப்பட்டு வரும் 4 திருவிழாக்களும் கொண்டாடப்பட்டது. இந்த திருவிழாக்களுக்கு சுற்றுப்புற கிராமங்களிலிருந்து பெருமளவில் மக்கள் வந்து கூடினர். அவசர கால மல அறைகளும், சிறுநீர் கழிப்பிடங்களும், தண்ணீர் விநியோகம் போன்ற பொது வசதிகள் வழக்கம் போல் இம்மாநகராட்சியால் செய்யப்பட்டது. மேலும்,

**31 குடிநீர் விநியோகம்**

- திண்டுக்கல் மாநகராட்சியில் உள்ள மொத்த குடியிருப்புகள் 57,726 ஆகும். வரி விதிப்புகளின் எண்ணிக்கை 49,280 மொத்த குடிநீர் குழாய் இணைப்புகளின் எண்ணிக்கை 33,348. இதில் வீட்டு குடிநீர் குழாய் இணைப்புகள் 32,509 மற்றும் வணிக வளாகங்கள் குடிநீர் குழாய் இணைப்புகள் 1,289 உள்ளது.

- திண்டுக்கல் மாநகராட்சியில் மொத்தம் 18 மேல்நிலை நீர் தேக்க தொட்டிகள் உள்ளது. இதனுடைய மொத்த கொள்ளளவு 154.25 இலட்சம் லிட்டர் ஆகும்.

குடிநீர் ஆதாரம்

| வ.எ. | திட்டத்தின் பெயர் | பராமரிக்கும் துறை | நீர் ஆதாரம் | செயல் படுத்தப்பட்ட ஆண்டு | நகரில் இருந்து தொலைவு | கொள்ளளவு |
|---|---|---|---|---|---|---|
| 1) | ஆத்தூர் காமராஜர் நீர் தேக்கம் | திண்டுக்கல் மாநகராட்சி | ஆத்தூர் அணை | 1962 | 24.00 கி.மீ | 158.00 எம்.சி.எப்டி (23'6'') (4500 எம்.எல்.) |
| 2) | காவேரி கூட்டு குடிநீர் திட்டம் | தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் | காவேரி ஆறு | 2006 | 99.00 கி.மீ | - |

- திண்டுக்கல் மாநகராட்சிக்கு சொந்தமான ஆத்தூர் காமராஜர் நீர்த்தேக்க திட்டம் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பராமரிக்கப்படும் காவிரி கூட்டு குடிநீர் திட்டம் ஆகிய இரண்டு திட்டங்கள் மூலம் பெறப்பட வேண்டிய குடிநீரின் அளவு முறையே 16.80 எம். எல். டி, 13.20 எம். எல். டி ஆக மொத்தம் (Designed Capacity) 30.00 எம்.எல்.டி ஆகும். இம்மாநகராட்சியின் 2011 ம் வருட மக்கள் தொகை 207225-ன்படி நாள் ஒன்றிற்கு , நபர் ஒன்றிற்கு 135 லிட்டர் வீதம் குடிநீர் வழங்குவதற்கு தேவையான குடிநீரின் அளவு (Water Supply Demand) 27.98 எம்.எல்.டி. ஆகும்.

தற்போதைய நிலை

- தற்சமயம் ஆத்தூர் நீர்த்தேக்கத்திலிருந்து சராசரியாக நாள் ஒன்றிற்கு 7 எம்.எல்.டி மற்றும் காவேரி கூட்டுக்குடிநீர் திட்டத்திலிருந்து 10.50 எம்.எல்.டி. ஆக மொத்தம் 17.50 எம்.எல்.டி குடிநீர் தினசரி பெறப்பட்டு சராசரியாக நாள் ஒன்றுக்கு ஒரு நபர் ஒன்றுக்கு 85 லிட்டர் மொத்தம் 48 வார்டுகளில், 9 வார்டுகளுக்கு தினசரியும், 27 வார்டுகளுக்கு ஒரு நாள் விட்டு ஒரு நாள், 12 வார்டுகளுக்கு 3 தினங்களுக்கு

ஒருமுறையும் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. குடிநீர் விநியோகத்தின் கால அளவு 1.30 மணி நேரம் ஆகும்.

- திண்டுக்கல் நகருக்கு குடிநீர் ஆதாரமாக உள்ள ஆத்தூர் காமராஜர் நீர்த்தேக்கத்தின் மொத்த உயரம் 23' 6" அடி ஆகும். தற்போதைய நீர்மட்டம் 17" அடியாகும். தற்போது அணையின் நீர்மட்டம் குறைந்து விட்டதால், ஆத்தூர் நீர்த்தேக்கத்தில் உள்ள 10 எண்ணம் திறந்த வெளி கிணறுகளில் 6 எண்ணம் திறந்த வெளி கிணறுகள் மற்றும் 10 எண்ணம் ஆழ்துளை கிணற்றிலிருந்து 6 எண்ணம் ஆழ்துளை கிணறுகளிருந்து குடிநீர் சேகரம் செய்யப்பட்டு உந்தப்பட்டு வருகிறது.
    - திண்டுக்கல் மாநகராட்சியில் உள்ள 413 எண்ணம் சிறு விசை மின் இறைப்பான், 152 எண்ணம் அடிக்குழாய் இவற்றின் மூலம் சராசரியாக நாள் ஒன்றிற்கு 1.10 எம். எல். டி குடிநீர் அல்லாத பிற உபயோகத்திற்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது
- இம்மாநகராட்சியில் 7000 லிட்டர் கொள்ளளவு உள்ள 3 குடிநீர் டேங்கர் லாரிகள் உள்ளது. அம்மா உணவகம், பேருந்து நிலையம், அரசு தலைமை மருத்துவமனை, திருவிழாக்கள், முக்கிய நிகழ்வுகள் மற்றும் குடிநீர் விநியோகத்தின் பற்றாக்குறை மேடான பகுதிகளுக்கு மலைக்கோட்டை நீர் உந்து அமைக்கப்பட்ட நீர் பிடிக்கும் இடத்தில் இருந்து லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. 1 லாரி 8 நடைகள் (Trips) வீதம் மூன்று லாரிகளும் 24 நடைகளில் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

(1) **காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டம்**

காவேரி கூட்டுக் குடிநீர் திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் ரூ.8,50,418 இலட்சம் செலவில் புதுப்பாளையம், ரெங்கநாதன்பேட்டை ஆகிய இடங்களில் இரண்டு உறிஞ்சு கிணறுகள் அமைக்கப்பட்டு 25.00 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட ஆறு சேகரிப்புத் தொட்டிகளில் சேகரம் செய்யப்பட்டு புதுப்பாளையம், வெள்ளையணை, கூடலூர், பாளையம், குஜிலியம்பாறை, எரியோடு ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள நீர் உந்து நிலையங்களின் மூலம் உந்தப்பட்டு திண்டுக்கல் எம்.வி.எம். நகரில் அமைக்கப்பட்டுள்ள சேகரிப்புத் தொட்டிக்கு பெறப்பட்டு நகரில் புதிதாக அமைக்கப்பட்ட அண்ணா நகர், குடகனாறு, ஆர்.எம்.காலனி ஆகிய மேல்நிலைத் தொட்டிகளிலும் ஏற்கனவே அமைந்துள்ள 8 மேல்நிலைத் தொட்டிகளின் மூலமும் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. திண்டுக்கல் நகருக்கு ஆத்தூர் காமராஜர் சாகர் திட்டத்தின் மூலம் உந்தப்படும் 6.43 எம்.எல்.டி.யில் 0.90 எம்.எல்.டி செலவழி கிராமங்களுக்குப் போக மீதமுள்ள 5.00 எம்.எல்.டி மற்றும் காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் கிடைக்கப் பெறும் சராசரி 10.00 எம்.எல்.டி ஆக மொத்தம் 15.53 எம்.எல்.டி. தண்ணீர் கிடைக்கப் பெறுகின்றது. இதன் மூலம் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 80 லிட்டர் வீதம் விநியோகம் செய்யப்படுகிறது. பேரணை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் நீர் உந்தப்படுவதில்லை.

| | | 01.4.2022 உள்ளபடி |
|---|---|---|
| 1 | அளவு கருவி குழாய்<br>விகிதம் (வீட்டு பயனுக்கு) | |
| 2 | அளவு கருவி குழாய் விகிதம் (வீட்டு பயனுக்கு<br>அல்லாதவை | |

அறிக்கையாண்டில் 26921 குழாய் இணைப்புகள் உள்ளன. வீட்டுக் குழாய் இணைப்புகளுக்கு கீழ்க்கண்ட கட்டணம் வசூல் செய்யப்படுகிறது. ஒரு குழாய் இணைப்புக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 46 /- மட்டும் வீட்டு உபயோகம் அல்லாத இணைப்புக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.90/- வசூலிக்கப்பட்டு வருகிறது. புதிதாக மேற்கொள்ளப்படும் குடிநீர் திட்டங்கள் (அ) குடிநீர் அபிவிருத்தி திட்டப் பணிகள்

இந்நகருக்கு தினசரி குடிநீர் வழங்கும் வகையில் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு இணைய நிதி மற்றும் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி நிதியின் கீழ் ரூ.70.50 கோடி மதிப்பீட்டில் சுமார் 55 ஆண்டுகளுக்கு முன் அமைக்கப்பட்ட ஆத்தூர் காமராஜர் நீர்த்தேக்கத் திட்டம் புனரமைப்பு செய்தல், மற்றும் கூடுதல் நீர்த்தேக்கங்களும், புதிதாக பகிர்மானக் குழாய்கள் அமைக்க திட்டமிடப்பட்டு 95 சதவீதப் பணிகள் முடிக்கப்பட்டு ஆகஸ்ட் 2017ல் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. (ஆ) கூடுதல் நீர்த்தேக்கம் அமைக்கும் பணி ஆத்தூர் காமராஜர் சாகர் அணையின் நீர்த்தேக்க கொள்ளளவை அதிகரிக்கும் பொருட்டு கூடுதல் அணை கட்டுவதற்காக உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பு நிதியின் கீழ் ரூ. 20.00 கோடி மதிப்பீட்டில் கூடுதலாக 714 மில்லியன் லிட்டர் குடிநீர் சேகரிக்கும் பணிக்கு 22.01.2016ல் வேலை உத்திரவு வழங்கப்பட்டு 50 சதவீதப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மேலும் இப்பணியானது டிசம்பர் 2017ல் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

### 32) அளவு கருவி விகிதம்

வீட்டு உபயோகத்திற்கு உபயோகப்படும் இனங்களுக்கு 1000 லிட்டர் அதன் பாகத்திற்கு ரூ.8.00, வீட்டு பயனல்லாத இனங்களுக்கு 1000 லிட்டர் மற்றும் அதன் பாகத்திற்கு ரூ.15.00 வீதம் கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

குழாய் விகிதாச்சார கட்டணத் தலைப்பின் கீழ் மற்றும் அளவு மானிய முறை தண்ணீர் கட்டணத் தலைப்பின் கீழ் வரப்பெற்றுள்ள ஆண்டு வருமான விபரம்.

### 33. பொது நலமும் தற்காப்பும்

அரசினர் தீயணைப்பு நிலையம் ஒன்று தீயணைக்கும் துறையின் பொறுப்பில் இயங்கி வருகின்றது.

**34 சந்தைகள்**

நகரில் 6 பொது சந்தைகள் உள்ளது. இவற்றில் ஒன்று வாரச் சந்தை, மற்றவை நாளங்காடிகள். தனியார் சந்தை ஒன்றும் இல்லை. இந்த சந்தைகள் மூலம் ஒவ்வொரு பகுதி மக்களும் நல்ல பயன் அடைந்துள்ளனர்.

1) முனியப்பன் கோவில் தெரு, தினசரி காய்கறி சந்தை (நாகல்நகர்)

2) தெற்கு ரதவீதி தினசரி காய்கறி சந்தை

3) பேகம்பூர் தினசரி காய்கறி சந்தை

4) காந்தி மைதானம் தினசரி காய்கறி சந்தை

5) வாரச்சந்தை

35 பேருந்து நிலையம்

நகர்ப்புற ஒருங்கிணைப்புத் திட்டத்தின் கீழ் புதிய பேருந்து நிலையக் கட்டுமானம் 3 நிலைகளாகக் கட்ட உத்தேசிக்கப்பட்டு, முதல் நிலைக் கட்டுமானம் 11 பேருந்து நிறுத்தும் இடங்களுடன் 39 கடைகளும், அதன் மேல் முதல் மாடி தங்கும் அறைகளுடன், பயணிகளின் தங்கும் அறைகளுடன் கட்டி முடிக்கப்பட்டு, பேருந்து நிலையம் பயன்பாட்டில் உள்ளது.

இரண்டாம் நிலையில், சைவ, அசைவ உணவு சிற்றுண்டிச்சாலை கட்டிடம் 18 கடைகள், 18 பேரூந்துகள் நிற்குமிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. கடைகளும், உணவு விடுதியும் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது.

மாநகராட்சி பேருந்து நிலையத்தில் ஒரு பேருந்துக்கு ரூ.15/- வீதம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் ஏலம் விடப்பட்டுள்ளது. இதன் மூலம் அறிக்கையாண்டில் கிடைத்த வருமானம் ரூ.15,01,000/-. பேருந்து நிலையத்திற்கு நாள்தோறும் சுமார் 646 பேருந்துகள் வந்து செல்கின்றன. பேருந்து நிலையத்தின் மூன்றாம் நிலை கட்டுமானப் பணிகள் பகுதி 1 மற்றும் பகுதி 2 கட்டிடங்கள் முறையே ரூ.18 லட்சம், ரூ.14.50 லட்சம் நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதியும் பெறப்பட்டு கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இதில் 26 பேருந்துகள் நிற்பதற்கும், 13 கடைகள் மற்றும் ஆண், பெண்களுக்கென தனித்தனியே ஒரு கழிப்பிடமும், பொருட்கள் வைப்பதற்கு ஒரு அறையும், ஆண்கள் தங்கும் அறை மற்றும் பெண்கள் தங்கும் அறை ஒன்றும் கட்டப்பட்டு பணிகள் முடிவுற்றன. அவை அனைத்தும் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. பேருந்து நிலையத்தின் வடபுறம் 54 கடைகள் ரூ.70 இலட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. புதிய பேருந்து நிலையம் கட்டும் பணி

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, மானியக்கோரிக்கை எண் 34 அறிவிப்புகள் 2023-2024-ல் வரிசை எண் 5-ல் திண்டுக்கல் மாநகராட்சியில் புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, இனிவரும் காலங்களில் கூடுதலாக ஏற்படும் போக்குவரத்து, மக்களின் தேவைகள், நகரினை மேம்படுத்தும் பன்னோக்கு திட்டங்களை கருத்தில்

கொண்டு மாநகரின் புறநகர் பகுதியில் புதிய இடம் 9.99 ஏக்கர் இலவசமாக பெறப்பட்டு 05.03.2024-ம் தேதி பத்திரப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

நில அளவை எண்கள். மேற்கு தாலுகா பள்ளப்பட்டி கிராமம் ளுகு சூடி:- 122/1யீவ(ள), 123யீவ(ள), 124யீவ(நு), 125/5யீவ(நு), 6,7,8,9யீவ(நு), 10, 11, 12,13, 14, 15, 16,17,18,19, 20, 368/யீவ(ள), 2யீவ(சூ), 370யீவ(சூ), 371/1ஹ2ஹயீவ(ள), 1ஹ3, 2ஹயீவ(சூ), 3யீவ(ள)

விரிவான திட்ட மதிப்பீடுகள் தயார் செய்ய கலந்தாலோசகர் நியமிக்கும் பணிக்கு 16.02.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு மெஸ்ஸர்ஸ். சரண் ஆர்கிடெக்ட்ஸ், சென்னை நிறுவனத்திற்கு (0.85% of Project Cost excluding GST) 23.03.2024 அன்று வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட விரிவான திட்ட மதிப்பீடுகள் ரூ. 47.18 கோடிக்கு TNUIFSL மூலம் நகர்ப்புற திட்டத்தில் நிதி உதவி பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் இப்பணிக்கு நிதி உதவி பெற Environmental and Social Impact Assessment (ESIA) அறிக்கை M/s Life Shell Labs India Private Ltd., Chennai நிறுவனத்தினரை கலந்தாலோசகராக நியமிக்க 24.07.2024 அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மேலும், திண்டுக்கல் மாநகராட்சி புதிய பேருந்து நிலையம் அமைக்கும் திட்டம் தொடர்பான பொதுமக்கள் கலந்தாய்வுக் கூட்டம் 05.11.2024-ல் மாநகராட்சி மைய அலுவலகத்தில் நடைபெற்றது. 84 பேர் கலந்துகொண்ட கூட்டத்தில் புதிய பேருந்து நிலையம் அமைக்கும் பணி நீண்ட நாள் கோரிக்கை என்பதாலும், அனைத்து வசதிகளுடன் அமைய உள்ளதாலும், நகரில் போக்குவரத்துப் பிரச்சனை தீரும் என்பதாலும், புதிய பேருந்து நிலையம் கட்டுவதை வரவேற்பதாகப் பெரும்பான்மையாக ஒருமனதாக முடிவு செய்யப்பட்டது.

மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்டுள்ள இனங்கள்

உத்தேச மதிப்பீட்டு தொகை : ரூ. 47.18 கோடி

பேருந்து நிறுத்துமிடம் 60 எண்ணம்

கடைகள் 81 எண்ணம்

உணவகம் 2 எண்ணம்

இரு சக்கர வாகன நிறுத்துமிடம் 1 எண்ம்

சுற்றுச்சுவர்

கண்காணிப்பு கேமரா

சோலார் பேனல்

மழைநீர் சேகரிப்பு மையம்

தண்ணீர் மறு பயன்பாட்டு செய்தல்

பசுமை பூங்கா அமைத்தல்

தற்போதைய நிலை

திட்ட மதிப்பீடு மற்றும் EISA அறிக்கையில் கூTNUIFSL நிறுவனத்தால் குறிப்பிடப்பட்ட குறைபாடுகள் சரி செய்து 14.07.2025க்குள் சமர்ப்பிக்கப்படும் என்ற விவரம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. காமராஜர் பேருந்து நிலையம்

**தற்போதைய பேருந்து நிலைய விபரம்**

| | | |
|---|---|---|
| பேருந்து நிலைய பரப்பளவு | - | 6.78 ஏக்கர் |
| பேருந்து நிலைய தரம் | - | ஹ கிரேடு |
| பேருந்து நிறுத்தங்கள் | - | 58 எண்ணம் |
| பேருந்து நிலைய கடைகள் | - | 128 எண்ணம் |
| புதிதாக கட்டப்பட்ட கடைகள் | - | 34 எண்ணம் |
| கட்டண கழிப்பறைகள் | - | 3 எண்ணம் |
| இலவச சிறுநீர் கழிப்பறைகள் | - | 8 எண்ணம் |
| தினசரி வந்து செல்லும் பேருந்துகளின் எண்ணிக்கை | - | 750 எண்ணம் |

**36 ஆடு வதைச் சாலை**

ஆடு வதைச் சாலை ஒன்று மட்டும் உள்ளது. கட்டணம் வசூலிக்கும் பணி பொது ஏலம் விடப்பட்டு ஒப்பந்தக்காரர் வசம் ஒப்படைக்கப்பட்டு கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது. ஆடு ஒன்றுக்கு ரூ.35.00/- வீதம் கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

கடந்த ஆண்டுகளில்¦ இத்தலைப்பின் கீழ் வரப்பெற்ற வருமானம்

2021-2022 2,55,850 (3 மாதங்களுக்கு

2022-2023 805927

**37. பழத் தோட்டம்**

மாநகராட்சி மூலம் பழத் தோட்டம் எதுவும் பராமரிக்கப்படவில்லை

**நகரமைப்பு பிரிவு, நகரமைப்பு பிரிவு அபிவிருத்தித் திட்டம்**

அறிக்கையாண்டில் திரு.அ. சேதுராஜன், செயற்பொறியாளர் (திட்டம்) (05.05.2023) பணியிட மாறுதலுக்குப் பின்பு தற்போது திரு.என்.எஸ். நாராயணன், செயற்பொறியாளர் (திட்டம்) அவர்கள¦ நகரமைப்பு அலுவலர் பதவியில் பணியாற்றி வருகிறார்கள்.

இப்பிரிவில் அறிக்கையாண்டில் கீழ்க்கண்ட அலுவலர்கள் பணியாற்றி வருகின்றனர்.

| வ. எண். | பெயர் | 2022-23 |
|---|---|---|
| 1 | முதுநிலை நகரமைப்பு அலுவலர் | திரு.அ. சேதுராஜன் (01.04.2021 முதல் 31.03.2022 வரை) |
| 2 | உதவிசெயற்பொறியளார்(திட்டம்) | 1. 1. திருமதி. பெ. சாந்தி, (01.04.2022 முதல் 03.11.2022 வரை)<br>2. 2. திருமதி. ஜி. வள்ளிராஜம் (04.11.2022 முதல் 31.03.2023 வரை) |
| 3 | நகரமைப்பு ஆய்வார்கள் | திரு.பி. வெங்கடேசன், |
| 4 | இளநிலை பொறியாளர் | 1. 1. திருமதி. பெ. சாந்தி,<br>2. 2. திருமதி. கே. சந்திரா<br>3. 3. திரு. ஜெ. தன்ராஜ் |
| 5 | உதவியாளர் | திரு. சா. அருள்முருகன் |
| 6 | இளநிலை உதவியாளர்கள் | 1. திருமதி. ஜெயலட்சுமி,<br>2. திரு. அ. ராஜ்குமார் |
| 7 | அலுவலக உதவியாளர்கள் | திரு. எஸ். வில்சன் |

2022-23ம் ஆண்டில் 302 கட்டிட விண்ணப்பங்கள் பெறப்பட்டது. அதன் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு 272 விண்ணப்பத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது, 29 விண்ணப்பங்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. 372 அனுமதியற்ற கட்டுமானங்கள் மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு நீதிமன்றத்தில் வழக்குகள் தொடரப்பட்டுள்ளது. ஆக்கிரமிப்புகள் கண்டுபிடிக்கப்பட்டு அவ்வப்போது அகற்றப்பட்டுள்ளது. கட்டிட விண்ணப்பங்களுக்கு உரிமையாணைத் தொகை ரூ.29,31,821/- அறிக்கையாண்டில் வசூல் செய்யப்பட்டது. அரசாணை எண் 59/25.7.06 மற்றும் அரசாணை எண்.244 நாள்.5.12.2008 உத்தரவுப்படி நடப்பாண்டில் ஏதும் மனைப்பிரிவுகள் முறைப்படுத்தப்படவில்லை. 2 மனைப் பிரிவிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது

**நகரமைப்பு திட்டம் மற்றும் விரிவு அபிவிருத்தி திட்டம்**

1. திண்டுக்கல் மேற்கு விரிவு அபிவிருத்தித் திட்டம் பரப்பளவு ஏக்கர் 58 ஏக்கர், 1340 ச.அடி. அரசாணை எண்.1824, பி.எச், .நாள்:17.5.1998 ல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

2. சௌராஷ்டிராபுரம் விரிவு அபிவிருத்தித் திட்டம் பரப்பளவு 15.44 ெஉறக்டேர் அரசாணை எண்.3798, பி. எச்., நாள்: 2.3.1942 ல் அங்கீகரிக்கப்பட்ட .

3. பாறைக்குளம் விரிவு அபிவிருத்தித் திட்டம் பரப்பளவு 60 ஏக்கர் .13279 ச.அடி அரசாணை எண்.760, பி.எச். நாள்:2.3.1942ல் அங்கீகரிக்கப்பட்ட .

4. அரண்மனைக் குளம் விரிவு அபிவிருத்தித் திட்டம் பரப்பளவு 8.252.5 ெஉறக்டேர். அரசாணை எண்.737 பி.எச். நாள்:27.2.1942ல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

5. திருவள்ளுவர் நகரமைப்புத் திட்டம் பரப்பளவு 72 ஏக்கர் 1476 ச.அடி அரசாணை எண்.1877, நாள்: 10.9.73ல் அங்கீகரிக்கப்பட்டது. ( சீராய்வு செய்யப்பட்டு இத்திட்டம் நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களது செயல்முறைகள் எண். 3411/2009/ டிபி2, நாள் 17.3.2010ல் இணக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

6. பாலகிருஷ்ணாபுரம், ரேஸ்கோர்ஸ் நகரமைப்புத் திட்டம் பாகம் 1 பரப்பளவில் 113 ஏக்கர் 30276 ச.அடி அரசாணை எண்.2458, நாள்: 15.12.1969ல் அங்கீகரிக்கப்பட்டது. ( சீராய்வு செய்யப்பட்டுள்ள இத்திட்டம் இணக்கம் பெறுவதற்காக 10.10.2011-ல் மீள சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

7. போடிநாயக்கன்பட்டி விரிவு அபிவிருத்தித் திட்டம் பரப்பளவு ஏக்கர் 128 - 23622 ச.அடி நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்கள் ந.க.எண்.33160/1978/டி2, நாள்:5.2.1980ல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

8. பாரதிபுரம் விரிவு அபிவிருத்தித் திட்டம் பரப்பளவு 64.10 ெஉறக்டேர். நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் 18.3.80 நாளிட்ட ந.க.எண்.13553/79 கடிதத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

9. மேட்டுப்பட்டி விரிவு அபிவிருத்தித் திட்டம் பரப்பளவு 56.70 ெஉறக்டேர். நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் ந.க.எண்.13554/72, / டி2. நாள்:19.12.79.ல; அங்கீகரிக்கப்பட்டுள்ளது. (சீராய்வு செய்யப்பட்டுள்ள இத்திட்டத்திற்கு நகர் ஊரமைப்பு துறை இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறைகள் எண். 7583/2005/டிபி2, நாள் 12.2.07ல் இணக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

10. மலைக்கோட்டை பகுதி விரிவு அபிவிருத்தித் திட்டம் பரப்பளவு 52.44 ெஉறக்டேர். நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் ந.க.எண்.18362/79டி2 நாள்:5.2.1980ல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

11. பென்சனர் தெரு வடக்கு விரிவு அபிவிருத்தித் திட்டம் பரப்பளவு 40 ெஉறக்டேர். நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் நக.எண்.15474/77எப்3,நாள்:4.8.78ல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. (சீராய்வு செய்யப்பட்டுள்ள இத்திட்டத்திற்கு நகர் ஊரமைப்பு துறை இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறைகள் எண். 4588/2004/டிபி2, நாள் 26.3.07ல் இணக்கம் அளிக்கப்பட்டுள்ளது)

12. காந்திஜி விரிவு அபிவிருத்தித் திட்டம் - பரப்பளவு 122 ஏக்கர். 21172 ச.அடி நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் ந.க.எண்.13552/79/டி2, நாள்:5.2.1980ல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சீராய்ப் பதிவு செய்யப்பட்டுள்ள இத்திட்டம் 7.12.2011ல் இணக்கம் அளிக்கப்பட்டுள்ளது

13. பாலகிருஷ்ணாபுரம், ரேஸ்கோர்ஸ் நகரமைப்புத் திட்டம் பாகம் 2 - பரப்பளவு 187 ஏக்கர் 39290 ச.அடி . நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் ந.க.எண்.20887/84-டி2, நாள்: 30.3.1986 கடிதத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

14. பூச்சிநாயக்கன் பட்டி நகரமைப்புத் திட்டம் - பரப்பளவு 41.01 ஹெக்டேர். இத்திட்டம் இணக்கம் பெறப்பட்டது.

15. மீனாட்சி நாயக்கன் பட்டி 1059 விரிவு அபிவிருத்தித் திட்டம் - பரப்பளவு 68.39 ெஉறக்டேர். நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் ந.க.எண். 1059/2003/டிபி2, நாள் 10.2.2011ல¦ அங்கீகரிக்கப்பட்டுள்ளது (வரைபட எண். டிடிபி.(எம்.ஆர்) ( டிசிபி எண் 2 / 2011)

திண்டுக்கல் முழுமைத் திட்டம் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி திட்டம் அரசாணை எண்.122, நாள்:16.4.1998ல் இணக்கம் அளிக்கப்பட்டு இதன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி திட்டம் அரசாணை எண். எம்எஸ்.759, நாள்:1.9.93ன்படி திண்டுக்கல் உள்ளூர் திட்டக் குழுமத் தலைவராக திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் உறுப்பினர் செயலராக நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களும் நியமிக்கப்பட்டு, உள்ளூர் திட்டக் குழுமம் சம்பந்தப்பட்ட கோப்புகள் விரிவு அபிவிருத்தித் திட்டம் சம்பந்தப்பட்ட கோப்புகள் அனைத்தும் 8.9.1993ம் நாள் உள்ளூர் திட்டக் குழும உறுப்பினர் செயலர் வசம் ஒப்படைக்கப்பட்டு விட்டன. உள்ளூர் திட்டக் குழுமத் திட்டம் மற்றும் விரிவு அபிவிருத்தித் திட்டங்கள் குறித்த அனைத்து நடவடிக்கைகள் தற்போது திண்டுக்கல் உள்ளூர் திட்டக் குழுமத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் திருத்தியமைக்கப்பட்ட திண்டுக்கல் முழுமைத் திட்டம் அரசாணை எண் 327, வீட்டு

வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, நாள் 24.7.2001ல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மேலும் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அரசாணை (எம்.எஸ்) எண்.759, நாள்:1.9.93ன்படி கட்டிட அனுமதி உள்ளூர் திட்டக் குழுமத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்ட பிறகு நகராட்சியால் உரிம ஆணை வழங்கப்பட்டு வந்தது. தற்பொழுது உள்ளூர் திட்டக் குழுவின் தலைவராக உள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் 3.11.99 மற்றும் 15.11.99ம் தேதிய உத்தரவுகளின்படி உறுப்பினர் செயலர், உள்ளூர் திட்டக் குழுமம் அவர்களின் கடிதம் ந.க.எண்.241/99, டி.எல்.பி.எ.(3) , நாள்: 4.1.2000ல் 200 ச.மீ. பரப்பளவு உள்ள குடியிருப்பு வீடுகளுக்கு நகராட்சி ஆணையரே கட்டிட அனுமதி வழங்கலாம் என்றும், குடியிருப்பு அல்லாத கட்டிடங்களுக்கும், உள்ளூர் திட்டக் குழுமத்தால் ஒப்புதல் அளிக்கப்பட வேண்டுமெனவும் அதிகாரம் வழங்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 9862/2010/பிஎ1, நாள். 17.02.2011 செயல்முறை ஆணையில் குடியிருப்பு மற்றும் வணிக உபயோகக் கட்டிடம் கட்டுவதற்கு உள்ளாட்சிகளுக்கு வழங்கப்பட்டிருந்த அதிகாரப் பகிர்வு பின்னர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. திட்டவிதி மற்றும் கட்டிட விதிகளில் உள்ளாட்சிகளுக்கு கீழ்க்கண்டவாறு கூடுதல் அதிகாரம் மேற்படி செயல்முறை ஆணையில் வழங்கப்பட்டுள்ளது.

1) புதிய அபிவிருத்தி திட்ட விதி 8ைைைை) ஒரு குடியிருப்புக்கு மேல்
2) 15 (1) – மனை உட்பிரிவு / ஒருங்கிணைப்பு ஒப்புதல்
3) மனைப்பிரிவு விதி (5) – ஒரு குடியிருப்புக்கு மேல் அதிகார வரம்பிற்குள் திட்ட அனுமதி வழங்கப்படும் உத்தேசங்களுக்கு மேற்காண் விதிகளை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி தளர்த்துவதற்கு அனுமதி வழங்கப்படுகிறது.
4) மனையிடத்தில் அமையும் நிலையில் உள்ள கட்டிடங்கள் மற்றும் உத்தேசக்கட்டிடங்களுக்கு மேற்படி அதிகார பகிர்வுக்கு உட்பட்டு அனுமதி வழங்க அதிகாரம் வழங்கப்படுகிறது.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண். 18, நாள். 04.02.2019 உத்தரவின்படி தமிழ்நாடு ஒருங்கிணைந்த கட்டிட விதிகள் நடைமுறைப்படுத்தபட்டு வருகிறது.

வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை அரசாணை எண். 154 & 256 நாள். 13.10.2020 & 21.12.2022 -ம் தேதிய உத்தரவில் 12 மீட்டர் உயரத்திற்கு மிகாமல் 8

குடியிருப்பு வீடுகள் அதிகபட்சமான 10,000 சதுரடி பரப்பளவில் கட்டுவதற்கு திட்ட மற்றும் கட்டிட அனுமதி வழங்குவதற்கு உள்ளாட்சிகளுக்கே அதிகார பகிர்வு அளிக்கப்பட்டுள்ளது. இதில் ஸ்டில்ட் தளம் + மூன்று தளங்கள் அல்லது தரைத்தளம் மற்றும் இரண்டு தளங்களுடன் கூடிய குடியிருப்பு கட்டிடமாக கட்டுவதற்கு அனுமதி வழங்குவதற்கு மேற்படி அதிகாரப்பகிர்வில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், வணிக உபயோகக்கட்டிடம் தரைத்தளம் மற்றும் முதல்தளம் அல்லது ஸ்டில்ட் தளம் மற்றும் இரண்டு தளங்களில் 2000 சதுரடி பரப்பளவிற்கு மிகாமல் கட்டுவதற்கு ஏற்கனவே உள்ளாட்சிகளுக்கு வழங்கப்பட்டிருந்த அதிகாரப்பகிர்வையே நடைமுறைப்படுத்தவும் மேற்படி அரசாணையில் உத்திரவிடப்பட்டுள்ளது.

மே/2022-ம் ஆண்டிலிருந்து ஆன்லைன் முறையில் திட்ட மற்றும் கட்டிட அனுமதி வழங்கப்பட்டு வருகிறது.

41 திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் 2025-2026

- திண்டுக்கல் மாநகராட்சியில் 48 வார்டுகளிலும் சேகரமாகும் மொத்த திடக்கழிவுகளின் அளவு 92 மெட்ரிக் டன் ஆகும்.
- இத்திடக்கழிவுகள் தனியார் நிறுவனத்தினரால் வீடு தோறும் சேகரம் செய்யப்பட்டு, மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பைகளாக பிரித்தெடுக்கப்பட்டு அகற்றப்பட்டு வருகிறது.

முருகபவனம் உரக் கிடங்கு

- திண்டுக்கல் மாநகராட்சி பழனி சாலை முருகபவனம் உரக்கிடங்கின் பரப்பளவு 12.23 ஏக்கர் ஆகும்.
- தூய்மை பாரத இயக்கம் 2.0 திட்டத்தின் கீழ் ரூ.745.00 இலட்சம் மதிப்பீட்டில் 110000 கன மீட்டர் திடக்கழிவுகளை பையோமைனிங் முறையில் அகற்ற 17.4.2023 இல் M/s Gorantla Geosynthetics Pvt Ltd, சென்னை நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டு பணி முடிவுற்றது.

**38வணிக வளாகம் கட்டும் பணி 2024-2025**

திண்டுக்கல் மாநகராட்சியில் மூலதன மானிய நிதி 2024-25 இன் கீழ் ரூபாய் 5.40 கோடி மதிப்பீட்டில் ஹஆஊ சாலையில் வணிக வளாகம் கட்டுவதற்கு 08-10-2024 இல் ஒப்பந்தபுள்ளி பெறப்பட்டு கூராய்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது. மேற்கொள்ளப்படவுள்ள பணிகள்

- மொத்த இடத்தின் பரப்பளவு - 49,950 சதுர அடி
- தரைதளத்தின் பரப்பளவு - 22,173 சதுர அடி
- கடைகளின் எண்ணிக்கை - 56 எண்ணம்
- திறந்தவெளி கடைகளின் எண்ணிக்கை- 50 எண்ணம்

- அளவு - 11 அடி ஒ 11 அடி கழிப்பறை வளாகம்
- ஆண் - 1 எண்ணம்
- பெண் - 1 எண்ணம்
- இரு சக்கர வாகனம் நிறுத்துமிடம் – 105 எண்ணம்
- நான்கு சக்கர வாகனம் நிறுத்துமிடம்- 29 எண்ணம்

**2025-2026 ம் ஆண்டின் மொத்த கடைகளின் எண்ணிக்கை 893 ஆகும்.**

| வ.எண். | 9 ஆண்டு குத்தகை இனத்தின் பெயர் கடைகள்/ அங்காடி/ இதர இனங்கள் (இனம் வாரியாக) | 2025-26 |
|---|---|---|
| 1 | அண்ணா வணிகவலாகம் | 54 |
| 2 | ஆவின் | 1 |
| 3 | பங்காளி மார்க்கெட் | 12 |
| 4 | கிழக்கு ரதவீதி | 6 |
| 5 | மீன் மார்க்கெட் | 16 |
| 6 | பூ மார்க்கெட் | 127 |
| 7 | காந்தி மார்க்கெட் | 327 |
| 8 | கமலா நேரு மருத்துவமனை ரோடு | 8 |
| 9 | பேருந்து நிலைய கடைகள் | 184 |
| 10 | கோட்டைக்குளம் ரோட்டில் உள்ள கடைகள் | 20 |
| 11 | மெயின் ரோடு கடைகள் | 6 |
| 12 | மார்க்கெட் கடைகள் | 3 |
| 13 | ஏ.எம்.சி. சாலை அண்ணா வணிக வளாக கடை | 20 |
| 14 | அலுவலக மேல்புறம் கடைகள் | 15 |
| 15 | பழைய பேருந்து நிலைய கடைகள் | 6 |
| 16 | பள்ளி வாசல் சந்து கடை | 16 |
| 17 | சோலைஹால் ரோடு | 7 |
| 18 | ஆண்டு குத்தகை இனம் | 1 |
| 19 | ஆண்டு குத்தகை இனங்கள் | 23 |
| 20 | பொது நிதி | 6 |
| 21 | மேற்கு ரத வீதி கடை | 35 |
| | **மொத்தம்** | 893 |

2024-2025ம் ஆண்டில் மொத்த கடைகளின் எண்ணிக்கை 891 ஆகும். இதன் மூலம் கிடைத்த வருவாய் ரூ. 2,66,29,004/-. 2024-2025ம் ஆண்டில் ஏலம் விட்ட குத்தகை இனங்களின் மூலம் கிடைத்த வருவாய் ரூ. லட்சம். வரியினம் மற்றும்

வரியில்லா இனம் ஆகிய இனங்களில் நிலுவையின்றி வசூல் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மனையடி வரி அதன் சதுரடி அளவில் விதிக்கப்படுகிறது. அரசின் நிலங்கள் மனையடி வரியிலிருந்து விலக்குக்குரியது. விளைநிலம் தவிர, காலிமனைக்கு மனையடி நிலங்களின் பெயரில் அதன் சதுரடி கிரய மதிப்பில் ஏ, பி, சி மண்டலங்கள் முறையே 0.40, 0.60, 0.80 பைசா வீதம் விதிக்கப்படுகிறது. பொது காரியங்களுக்கான வரி விகிதாச்சாரத்தில் ரூ.1.00க்கு 0.10 பைசா வீதம் நூலக வரியும் விதிக்கப்பட்டுள்ளது. நூலக வரி முழு ரூபாய்க்கு 0.10 பைசா வீதம் வசூலிக்கப்படுகிறது. நூலக வரியாக அறிக்கையாண்டில்¦ ரூ............................../- வசூலிக்கப்பட்டுள்ளது.

| வருடம் | செலவினம் |
|---|---|
| 2024-2025 | 2,05,02,985 |

**\39. கணக்குகள்**

2025– 2026 ம் அறிக்கையாண்டில் ஆரம்ப கையிருப்பு ரூ.. . . . / - ம் முடிவு கையிருப்பு ரூ..... . . ./ - ம் இருந்தது.

**கடன்கள்**

2025-26ல் கடன் தொகை - ளுசுளு /-

எல்லாக் கடன்களும் சேர்த்து பின்வரும் விபரப்படி அசல் ரூ 72007978 ./- மற்றும் வட்டி ரூ. 19902028/- செலுத்தப்பட்டுள்ளது. ஆண்டுகளின் இறுதியில் நிலுவையாக இருந்த கடன் தொகை விபரம் பின்வருமாறு

| வ. எண். | | 2025-26 | |
|---|---|---|---|
| | | அசல் | வட்டி |
| 1 | அரசு SFC Advance | 6,00,00,000 | - |
| 2 | பாதாள சாக்கடைத் திட்டம் | 58,13,332 | 18,39,928 |
| 3 | குடிநீர் அபிவிருத்தி திட்டம் | - | 1,80,62,100 |
| 4 | UIDSSMT | 61,94,646 | - |
| 5 | காவேரி திட்டம் | - | - |

\

**பி7 தணிக்கை இருக்கை**

**கொடி நாள்**

2024– 2025ம் ஆண்டுக்கு திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் இந் நகராட்சிக்கு கொடி நாள் குறியீடு .00 லட்சமாகும். அறிக்கையாண்டில் ரூ.3.19 லட்சம் மட்டும் வசூல் செய்யப்பட்டது. இது மொத்த குறியீட்டுக்கு 50ரூ சதவீதமாகும்.

| **வருடம்** | **நிர்ணயிக்கப்பட்ட குறியீடு** | **வசூல் செய்யப்பட்ட தொகை** | **சதவீதம்** |
|---|---|---|---|
| 2024-25 | 14,78,000 | 5,50,000 | |

**<u>தணிக்கை</u>**

| | **2023-24** | **2024-25** |
|---|---|---|
| ஆண்டின் துவக்கத்தில் நிலுவையாக உள்ள தணிக்கை தடைகளின் எண்ணிக்கை | 1269 | |
| அறிக்கை ஆண்டில் பெறப்பட்டது | | |
| மொத்தம் | 1269 | |
| அறிக்கையாண்டில் நிவர்த்தி செய்யப்பட்டது | | |
| ஆண்டின் இறுதியில் நிலுவை | | |

விரைவில் தணிக்கைத் துறையினருடன் கூட்டமைப்பு நடத்தி தணிக்கைத் தடைகள் நிவர்த்திக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**40. வருவாய் பிரிவு**

**அறிக்கையாண்டில் கீழ்க்கண்ட பணியாளர்கள் பணியாற்றுகிறார்கள்**

| வ.எண். | | 2025-26 |
|---|---|---|
| 1 | உதவி வருவாய் அலுவலர் (பொ) | 4 |
| 2 | உதவியாளர் | 0 |
| 3 | இளநிலை உதவியாளர்கள் | 2 |
| 4 | அலுவலக உதவியாளர்கள் | - |
| 5 | வருவாய் உதவியாளர்கள் | 11 |
| 6 | வருவாய் ஆய்வர் (சி) | 1 |

கீழ்க்கண்ட விகிதப்படி ஆண்டு வாடகை மதிப்பில் அரையாண்டிற்கு சொத்துவரி விதிக்கப்பட்டு வருகிறது.

**பொதுக் காரியங்களுக்கு** 9.19

**தண்ணீர் மற்றும் சாக்கடை வரி** 4.00

**கல்வி வரி** 2.50

15.69 ரூ

என்ற விகிதப்படி சொத்துவரி வசூலிக்கப்பட்டு வருகிறது. நூலக வரியாக சொத்து வரியில் ஒரு ரூபாய்க்கு 0.10 பைசாவாக வசூலிக்கப்பட்டு வருகிறது.

**சொத்து வரி 2025-26**

அறிக்கையாண்டில் சொத்துவரி கேட்பு வசூல் விபரம் கீழே தரப்பட்டுள்ளது

| ரூ. லட்சத்தில் | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வருடம் | கேட்பு | | | வசூல் | | | நிலுவை | | | வசூல் சதவீதம் |
| | நிலுவை | நடப்பு | மொத்தம் | நிலுவை | நடப்பு | மொத்தம் | நிலுவை | நடப்பு | மொத்தம் | |
| 2025-26 | 1446.18 | 2958.69 | 4404.88 | 560.88 | 2470.33 | 3031.22 | 885.29 | 488.35 | 1373.65 | 68.82 |

## தொழில் வரி

அறிக்கையாண்டில் தொழில் வரி கேட்பு வசூல் விபரம் கீழே தரப்பட்டுள்ளது

ரூ.லட்சத்தில்

| வருடம் | கேட்பு | | | வசூல் | | | நிலுவை | | | வசூல் சதவீதம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | நிலுவை | நடப்பு | மொத்தம் | நிலுவை | நடப்பு | மொத்தம் | நிலுவை | நடப்பு | மொத்தம் | |
| 2025–26 | 410.60 | 243.05 | 653.66 | 25.53 | 132.52 | 158.05 | 385.07 | 110.52 | 495.60 | 24.18 |

அறிக்கையாண்டில் வரியற்ற இனங்களின் கேட்பு வசூல் விபரம் கீழே தரப்பட்டுள்ளது

ரூ.லட்சத்தில்

| வருடம் | கேட்பு | | | வசூல் | | | நிலுவை | | வசூல் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | நிலுவை | நிலுவை | நிலுவை | நிலுவை | நடப்பு | மொத்தம் | நிலுவை | நடப்பு | மொத்தம் | |
| 2025–26 | 947.90 | 505.70 | 1453.60 | 213.79 | 221.06 | 434.86 | 734.10 | 284.64 | 1018.74 | 29.92 |

24/6/26

ஆணையர்,
திண்டுக்கல் மாநகராட்சி.

CamScanner